
# திருக்கோயில்

அக்டோபர் 1993 விலை ரூ. 3



# மாண்புமிகு

## முதல்வர் அவர்களின்

## விஜயதசமி வாழ்த்து



நல்லவைகளே நிலைத்து நிற்கும் என்ற வாழ்க்கையின் தத்துவத்தை நமக்கு உணர்த்துகின்ற விஜயதசமி திருநாளைக் கொண்டாடும் தமிழக மக்கள் அனைவருக்கும் எனது இதயம் கனிந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

செய்யும் தொழிலே தெய்வம் என்ற எண்ணத்துடன் நாம் சிறப்பாக தொழிலைச் செய்வதற்கு உதவி செய்யும் அனைத்து ஆயுதங்களையும் வழிபடுகின்ற ஆயுத பூஜையுடன், வாழ்க்கையில் நாம் அனைவரும் பண்பாளர்களாக விளங்க வைக்கும் கல்விச் செல்வத்தின் மாண்பினைப் போற்றுகின்ற வகையில் சரஸ்வதி பூஜையையும் கொண்டாடுகின்ற தமிழக மக்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முகப்பு:

திருச்சானூர்
அருள்மிகு பத்மாவதி தாயார்

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை.
119, உத்தமர் காந்தி நெடுஞ்சாலை,
சென்னை — 600 034.
தொலைபேசி எண்: 8279407

ஆசிரியர்:
கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.

| மாலை: 35 | திருவள்ளுவர் ஆண்டு 2024 ஸ்ரீமுக ஆண்டு ஐப்பசி<br>அக்டோபர் 1993 விலை ரூ. 3-00 | மணி: 10 |
|---|---|---|


## திருக்கோயில் வாசகர்களுக்கு அறிவிப்பு

அன்பு வாசகர்களே! வணக்கம்

திருக்கோயில் திங்கள் இதழின் உறுப்பினர்களாகச் சேர விருப்பம் உள்ளவர்கள்

**உயர்திரு ஆணையர் அவர்கள்**
**இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை**
**சென்னை — 600 034**

என்ற முகவரிக்கு பணவிடை அல்லது வங்கி வரைவோலை மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

### சந்தா விவரம்

| | | | |
|---|---|---|---|
| அரை ஆண்டு | — | ரூ. | 18-00 |
| ஓர் ஆண்டு | — | ரூ. | 36-00 |
| ஆயுள் | — | ரூ. | 300-00 |

சந்தாதாரர்கள் முழுமுகவரியைத் தெரிவிக்க வேண்டும்.
முகவரியில் மாற்றம் இருப்பின் உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை..


சேக்கிழார் புகழ்பரவச் செய்வோம்
—மாண்புமிகு உணவு அமைச்சர் திருமிகு ஆர்.எம்.வீ. அவர்கள்

நவராத்திரி விழா உணர்த்தும் நுண்பொருள்கள்
—ஜி. இராமகிருஷ்ணன் ஐ.ஏ.எஸ்.

திருமுறைத் தேன்துளிகள்
—ஈரோடு த. விசுவநாதன்

கீதைக்குறள்கள்
—அறநெறியண்ணல் கி. பழநியப்பனார்

பன்னிரு ஆழ்வார்கள்
—டாக்டர் பருத்தியூர் சந்தானராமன்

தெய்வச் சேக்கிழார் திருப்பதிகம்
—தவத்திரு அண்ணாமலை அடிகள்

ஆடல்காணீரோ திருவிளையாடல் காணீரோ
—கம்பன் கவிநயமணி வே. தியாகராஜன்

கண்ணன் திருமேனி அழகு
—திருக்குடந்தை சௌரிராஜ திருவேங்கடத்தான்

வினையிருள் அகல
—வ. ராமதாஸ் ஐ.ஏ.எஸ்.

திருவேங்கடவன் திருப்பள்ளி எழுச்சி..
—கவிமாமணி மதிவண்ணன்

மக்கள் தொண்டே மகேசன் தொண்டு
—டாக்டர் கரு. நாகராஜன்

திருக்கோயில்களின் திருப்பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு.

# சேக்கிழார் புகழ் பரவச் செய்வோம்!

மாண்புமிகு உணவு அமைச்சர் திருமிகு ஆர்.எம்.வீ. அவர்கள்

தலைமைச் செயலகம், சென்னை-600 009

''என் கடன் பணி செய்து கிடப்பதே'' என்று தொண்டின் சிறப்பை வலியுறுத்திய அருளாளர் அப்பர்சுவாமிகள். மனிதர்கள் வாழ்ந்தால் நல்ல குறிக்கோளுடன்தான் வாழ வேண்டும் என்பதையும் தேவாரப் பாடல் ஒன்றில் வற்புறுத்திக் கூறியிருக்கின்றார்.

''பாலனாய்க் கழிந்த நாளும், பனிமலர்க்
கோதைமார்தம்
மேலனாய்க் கழிந்த நாளும் மெலிவொடு மூப்பு
வந்து
கோலனாய்க் கழிந்த நாளும் குறிக்கோள்
இலாது கெட்டேன்
சேலுலாம் பழன வேலித் திருக்கொண்டீச்
சரத்து ளானே''

என்பது அப்பர் சுவாமிகளின் அருட்பாடல்.

நல்ல குறிக்கோளுடன் வாழ்ந்து நாட்டிற்கு வழிகாட்டிய தமிழ் அடியார்களின் வரலாற்றை விவரிக்கும் நூல்தான்பெரியபுராணம். பெரியபுராணம் என்ற பெயரைக் கொண்டு இது ஒரு பழமைக் கருத்துகள் கொண்ட அளவில் பெரிய நூல் என்பதாகக் கருதிவிடக் கூடாது. தமிழ்நாட்டின் ஒழுக்கத்தை, பண்பாட்டை, வரலாற்றைச் சொல்லுகிற தலை சிறந்த நூல்தான் கி.பி. பனிரண்டாம் நூற்றாண்டில் சேக்கிழார் பெருமான் இயற்றிய ''திருத்தொண்டர் புராணம்'' எனும் பெரிய புராணம் ஆகும். பெருமையில் சிறந்து, செயற்கரும் செயல்கள் புரிந்த திருத்தொண்டர் வரலாறு கூறும் நூல் என்பதாலேயே சேக்கிழார் அருளிய 'திருத்தொண்டர் புராணம்', 'பெரிய புராணம்' என்று போற்றப்படுகிறது.

உலகப் புகழ்மிக்க மாபெரும் கவிஞரான கம்பர் வடக்கில், நடைபெற்ற வரலாற்று நிகழ்ச்சிகளில் இருந்து அடிப்படைக் கருத்துக்களை-அடிப்படைக் கருவை, எடுத்துக்கொண்டு தமிழ்நாட்டினுடைய பண்பை இழைத்து, கம்ப இராமாயணத்தை வழங்கியிருக்கிறார். அதைப்போல கந்தபுராணம் என்றாலும் சரி, வில்லிபாரதம், திருவிளையாடல் புராணம் என்று வேறு சில நூல்களை எடுத்துக்கொண்டாலும் சரி, அவற்றில் வரும் கதை நிகழ்ச்சிகள் அடிப்படைக் கருத்துக்கள் தமிழ்நாட்டிற்கு உரியனவாக இல்லை. ஆனால் சேக்கிழார் இயற்றிய பெரியபுராணம்தான் தமிழ்நாட்டில் மட்டும் நடைபெற்ற நிகழ்ச்சிகளைக் கொண்டு உருவாக்கப் பெற்றிருக்கிற தமிழ்நாட்டினுடைய வரலாற்று இலக்கியம் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. அதனால்தான் மகாகவி மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் தாம் இயற்றிய 'சேக்கிழார் பிள்ளைத் தமிழ்' நூலில்

'இப்படி யார் பெற்றார் தமிழ் மான்மியம்!
எப்பாடைகளுக்கு உளது இப்பாக்கியம்!
நம் தவம்''

என்று தமிழ்மொழியில் தோன்றிய தலைசிறந்த நூல் பெரியபுராணமே என்பதைப் போற்றிக் கூறியிருக்கக் காண்கிறோம்.

இன்றைக்கு ''ஆண்டவன் படைப்பில் அனைவரும் சமம்'' என்ற சமதர்மத் தத்துவத்தை அரசியல் தலைவர்களும், சமுதாயச் சீர்திருத்தவாதிகளும் வற்புறுத்தி வருவதை நாம் அனைவரும் அறிவோம். இத்தகைய சமதர்மத் தத்துவத்தை— சகோதர நேசத்தைக் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டிலேயே இறைவன் பெயரால் வற்புறுத்திய சான்றோர் பெருந்தகைதான் சேக்கிழார் பெருமான். 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்ற ஒப்பற்ற தத்துவத்தை வலியுறுத்திய புரட்சித் தமிழ்க் காப்பியம்தான் நம் சேக்கிழார் பெருமான் அருளிய பெரியபுராணம்.

**சேக்கிழார் ஆராய்ச்சி மையத்தின் தொடக்கவிழா அண்மையில் சென்னை இராணி சீதை மன்றத்தில் நடைபெற்றது. மாண்புமிகு உணவு அமைச்சர் திருமிகு ஆர். எம். வீ. அவர்கள் சேக்கிழார் ஆராய்ச்சி மையத்தைத் தொடக்கி வைத்து ஆற்றிய சிறப்புரை இங்கு மகிழ்ச்சியுடன் வெளியிடப்படுகிறது.**

அரசர்கள் முதலாக, தாழ்த்தப்பட்ட ஒடுக்கப்பட்ட அமுக்கி வைக்கப்பட்டிருக்கிற சாதாரண மக்கள் வரை அத்தனை பிரிவினரையும் தேர்ந்தெடுத்து 63 நாயன்மார்கள்-அவர்கள் வேறு வேறு பிரிவினராக-வேறு வேறு வாழ்க்கை நிலையினராக இருந்தாலும், தொண்டு செய்தால் இறைவனைச் சேரலாம்: இறைவன் முன்னிலையில் அனைவரும் சமம் என்ற தத்துவத்தை மிகச் சிறப்பாகப் பெரியபுராணத்தில் சேக்கிழார் பெருமான் வற்புறுத்தியிருக்கக் காண்கிறோம்.

''எந்நிலையில் நின்றாலும் எக்கோலம்
கொண்டாலும்
மன்னியசீர் சங்கரன்தாள் மறவாமை பொருள்'

என்பதை வற்புறுத்துவதற்காகவே கி.பி. மூன்றாம் நூற்றாண்டு முதலாக கி.பி. எட்டாம் நூற்றாண்டு முடிய ஒரு 600 ஆண்டுக்காலம் தமிழ் மண்ணில் வாழ்ந்து விளங்கி வழிகாட்டிய தமிழ்ப் பெருமக்களுடைய வரலாற்றைத் தொகுத்து வழங்கியதன் வாயிலாகப் பெரிய புராணத்தை ஒரு தமிழ் வரலாற்றுக் காப்பியமாக உருவாக்கியிருக்கிறார் தொண்டர்சீர் பரவுவாரான நம் சேக்கிழார் பெருமான்.

ஆதிசைவ அந்தணரில் நால்வர், வேதியரில் பன்னிருவர், மாமாத்திரர் ஒருவர், முடி வேந்தர் அறுவர், குறுநில மன்னர் ஐவர், வணிகர் ஐவர், வேளாளர் பதின்மூவர், இடையர் இருவர், குயவர் ஒருவர், பாணர் ஒருவர், பரதவர் ஒருவர், வேடர் ஒருவர், சான்றார் ஒருவர், சாலியர் ஒருவர், செக்கார் ஒருவர், ஏகாலியர் ஒருவர், ஆதிதிராவிடர் ஒருவர் என்று—இந்தச் சமுதாயத்தில் இருக்கிற அனைத்துப் பெருமக்களும் இக்காவியத்தில் நாயகர்களாக வருகின்றார்கள். இவர்கள் அனைவரும் இறைவனின் அடியார்கள். இறைநெறியை ஏற்றுச் சமுதாயத்திற்கு 'அன்பே சிவம்' என்று எண்ணித் தொண்டு புரிந்தவர்கள்,

இவர்களில் அரசன் என்றும், ஆண்டி என்றும் பேதமில்லை; ஏழையென்றும் பணக்காரன் என்றும் பேதம் இல்லை. வேதியரும் ஒன்றுதான்—வேடுவரும் ஒன்றுதான்; வேளாளரும் ஒன்றுதான்—ஏகாலியரும் ஒன்றுதான். வேளாளர் குலத்துதித்த திருநாவுக்கரசரைத் தம் குருவாகக் கொண்டு அந்தணர் குலத்தில் தோன்றிய அப்பூதியடிகள் போற்றுவதையும் இப்பெரிய புராணத்தில் காண்கிறோம். அந்தணர் குலத்தில் அவதரித்தவரான திருஞானசம்பந்தர் தம் பாக்களுக்குப் பண் அமைத்து யாழில் வைத்துப் பாட திருநீலகண்ட யாழ்ப்பாணரைத் தம் தோழராகக் கொண்டிருந்ததையும் இப்பெரியபுராணத்தில் காணுகின்றோம். சேரமான்பெருமாள் நாயனார் எனும் முடிவேந்தர் கோயிலுக்குச் சென்று பட்டத்து யானைமேல் அரண்மனைக்குத் திரும்பும் வழியில் உவர்மண் சுமந்து வந்த ஒரு சலவைத் தொழிலாளியை திருநீறு பூசிய சிவனடியாராக எண்ணி யானையினின்று கீழிறங்கித் தொழுத சமத்துவத்தையும் பெரியபுராணத்தில் நாம்

## இன்பமே என்றும் துன்பமில்லை

**நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலையல்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோமல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பமில்லை.**

**—அப்பரடிகள்**

காண்கிறோம். சலவைத் தொழிலாளர் மன்னனை வணங்க ''அடியேன் அடிவண்ணான்'' எனக் கூற, முடி வேந்தரான சேரரும் 'அடியேன் அடிச் சேரன்' என்று கூறிய இத்தகைய சமத்துவ சமதர்மத்தைப் பெரியபுராணத்தில் தானே காணமுடிகிறது.

இன்றைக்கு 'ஐயர்' என்று பட்டப் பெயரால் அந்தணர்களைச் சிறப்பிக்கிறார்கள். 'ஐயர்' என்பது சமுதாயத்திலே உயர்ந்தவர்களைச் சுட்டுவதற்கான சிறப்புப் பெயராக விளங்கி வருகிறது. ஆனால், தமிழர் வரலாற்றுக் காவியமான பெரிய புராணத்தில் சேக்கிழார் ஒரு பெரும் புரட்சி செய்திருக்கிறார் என்பதை இங்கே நான் பெருமையுடன் நினைவுபடுத்த விரும்புகிறேன். இறைவனே 'ஐயன்' என்பதும், இறையடியார்கள் அனைவரும் 'ஐயர்' என்பதும் சேக்கிழார் கருத்தாகும். 'ஐயர்' என்ற அந்த உயர்ந்த சிறப்புப் பெயரால் பெரியபுராணத்தில் அந்தணர் எவரையும் சேக்கிழார் சுட்டினார் இல்லை. ஒரு பாணரையும், ஒரு வேடரையும், ஒரு ஆதி திராவிட நாயனாரையும்தான் சேக்கிழார் பெருமான் 'ஐயர்'எனச் சுட்டிக்காட்டிப்பெரும் புரட்சி செய்திருக்கக் காணுகின்றோம்.

திருஞானசம்பந்தர், திருநீலகண்ட யாழ்ப் பாணரை விளித்துப் பேசும்போது

''**ஐயர்** நீர் உளமகிழ இங்கணைந்த
உறுதி உடையோம் ''

''**ஐயர்** நீர் அவதரித்திட இப்பதி
அளவில் மாதவம்முன்பு செய்தது''

என்று சுட்டிச் சிறப்பிக்கக் காண்கிறோம்.

தில்லை மறையவர்கள், திருநாளைப் போவாரை விளிக்கும்போது,

''**ஐயரே!** அம்பலவர், அருளால் 'இப்பொழுது
அணைந்தோம்
வெய்ய அழல் அமைத்து உமக்குத் தரவேண்டி'

என்று ஐயர் எனச் சுட்டுவதைக் காணுகின்றோம். இதைப்போலவே சேக்கிழார் தம் திருவாக்கால் வேடுவராகிய கண்ணப்பரைச் சிறப்பித்து,

''பேணு தத்துவங்கள் என்னும் பெருகு
சோபானம் ஏறி
ஆணையால் சிவத்தைச் சார அணைபவர்
போல ஐயர்
நீணிலை மலையை ஏறி நேர்படச் செல்லும்
போதில்'—

என்று ஐயர் எனச் சுட்டி மாபெரும் புரட்சியை செய்து 'ஆண்டவனின் அடியார்கள் அனைவரும் சமம்' என்பதைப் பெரிய புராணக் காவியத்தின் வாயிலாக நிலைநாட்டியிருக்கக் காண்கிறோம்.

''ஆண்டவன் முன்னிலையில் அனைவரும் சமம்'' என்ற கருத்தை வலியுறுத்துவது மட்டுமல்ல; 'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு' என்று சமுதாயத்திற்குத் தொண்டு புரியும் தூயமனிதர்களைத் தேடிக் கடவுளே அவர்கள் வாழும் இடத்தைத் தேடி வருகிறார் என்ற மகத்தான தத்துவத்தைச் சொல்லுகிற மாபெரும் வரலாற்று இலக்கியமாகவும் பெரிய புராணம் விளங்குகின்றது.

''வாழி திருத் தொண்டென்னும் வான்பயிர்
தான் ஓங்குதற்குச்
சூழும் பெருவேலி யானீர்''—

என்று இந்நூலில் வரும் தொண்டர்கள் அனைவராலும் சிறப்புற்றது திருத்தொண்டே என்று சேக்கிழார் பெருமான் சிறப்பித்துக் கூறியிருக்கக் காண்கிறோம். பெரியபுராணம் தொண்டை வற்புறுத்தும் நூல் மட்டுமல்ல; மக்கள் வாழ்வில் ஒழுக்கத்தை வற்புறுத்தும் வாழ்வியல் நூலும் ஆகும். மனிதன் வீரனாக இருக்கலாம்; விவேகியாக இருக்கலாம்; வீரத்தின் காரணமாக தன் கண்ணை அப்பியும், தன் மகனை வெட்டிக் கறி சமைத்தும்கூட தியாகமும், தொண்டும் புரியலாம். உணர்ச்சி வயப்பட்டு அடியார்கள் செய்யும் அத்தகைய பல தியாகங்களையும் பெரிய புராணத்தில் காணுகின்றோம். ஆனால் பெரிய புராணத்தின் வாயிலாகச் சேக்கிழார் போற்றுவது பெரிதும் ஒழுக்கமே ஆகும். ஒழுக்கத்தின் அடிப்படையில் அமையும் தொண்டுள்ளமே, வீரத்தின் அடிப்படையில் அமைந்த தொண்டைவிட சிறப்புமிக்கதாகும் என்பதைத்தான் சேக்கிழாரின் பெரிய புராணம் பெரிதும் வற்புறுத்தியிருக்கக் காண்கிறோம்.

பட்டினத்தார் செயற்கரும் செயல் புரிந்த மூன்று நாயன்மார்களின் தொண்டினை வியந்து ஒரு பாடலில் போற்றியிருக்கின்றார்...

'வாளால் மகவரிந்து ஊட்ட வல்லேன்அல்லேன்
மாதுசொன்ன
சூளால் இளமை துறக்க வல்லேன் அல்லேன்
தொண்டு செய்து
நாளாறில் கண்இடந்து அப்ப வல்லேன்
அல்லேன் இனிச்சென்று
ஆளாவது எப்படியோ திருக்காளத்தி
அப்பருக்கே''—

என்ற அந்தப் பாடலில் பட்டினத்தார் தம் கண்ணையே காணிக்கையாக்கிய தியாகி கண்ணப்பரைப் பற்றியும், பெற்ற மகனையே வெட்டிச் சமைத்துக் கொடுத்த வீரர் சிறுத்தொண்டரைப் பற்றியும் பாராட்டியதோடு, வாழ்க்கையில் தவறுகளைச் செய்து கொண்டிருந்த திருநீலகண்டர் ஒழுக்க சீலராக மாறிய பண்பாட்டைப் பற்றியும் வியந்து கூறிப் போற்றியிருக்கக் காண்கிறோம்.

இம்மூவரின் தியாகங்களில் எது சிறந்த தியாகம் என்பதாகக் கேட்டுத் தமிழ் அறிஞர்கள் வாதிட்ட பல பட்டிமன்றங்களையும் கூட நான் கேட்டிருக்கிறேன். இத்தகைய பட்டிமன்றம் ஒன்று இன்றும் இந்த சென்னை இராணிசீதைமன்றத்திலேயே நடந்தபொழுது, அப்பட்டிமன்றத்தின் நடுவராக வீற்றிருந்த பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன் அவர்கள், ஒழுக்கத்தின் அடிப்படையிலே வாழ்ந்து திருநீலகண்டர் செய்த தியாகமே கண்ணப்பரும், சிறுத்தொண்டரும் செய்த தியாகங்களைவிடப் பெரியது என்று தீர்ப்பளித்தார்கள். திருநீலகண்டரின் மனைவி 'எம்மைத் தீண்டு வீராகில் திருநீலகண்டம்' என்று ஒரு கட்டளையிட்டாள். அக்கட்டளையை ஏற்று திருநீலகண்டர் இளையவராய் இருந்த நிலையிலும் சரி, முதுமைப்பருவம் வந்துற்ற போதும் சரி,. தமக்கு உரிமை வாய்ந்த மனைவியை மட்டுமல்ல, 'எம்மை' என்று சொன்ன படியால் மகளிர் ஒருவரையுமே அவர் நினைத்துப் பார்க்காமல் ஒழுக்கசீலராய் வாழ்ந்த அந்த தியாகமே பிற தியாகத்தை விடவும் சிறந்தது- மனிதன் தொண்டுள்ளத்தோடு வாழ்வது மட்டும் போதாது. அந்தத் தொண்டுள்ளமும் ஒழுக்கத்தின் அடிப்படையிலேயே அமைய வேண்டும் என்று பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன் அவர்கள் தீர்ப்பளித்து, ஒழுக்கத்தை வற்புறுத்தும் வாழ்வியல் நூல் பெரிய புராணம் என்பதை மிக அழுத்தமாக எடுத்துக் காட்டினார்களென்பதை உங்களில் பலரும்கூட கேட்டு மகிழ்ந்திருப்பீர்கள்.

## தீபாவளி நல்வாழ்த்துக்கள்

## திருக்கோயில் வாசகர்களுக்கு எங்கள் மனமார்ந்த தீபாவளி நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கிறோம்

மனைவி என்று சொல்லப்படுகிற ஒரு பெண்ணிற்குத் தமிழ்ச் சமுதாயத்தில் எவ்வளவு மரியாதையும், உயர்வும் தரப்பட்டிருக்கிறது என்பதையும் நாம் திருநீலகண்ட நாயனார் வரலாற்றின் மூலமாக உணருகினறோம். ஆணும் பெண்ணும் சமம் என்பதையும் ஒரு ஆணைக் கட்டுப்படுத்த வேண்டுமானால், திருத்த வேண்டுமானால் அது ஒரு பெண்ணாலேதான் முடியும் என்பதையும் இந்த வரலாற்றின் மூலமாகச் சேக்கிழார் பெருமான் தெளிவுபடுத்தியிருக்கின்றார். ஆகவேதான் சிறந்த ஒழுக்கத்தை—ஒழுக்கமுடன் தொண்டு புரியும் மனிதர்களில் பேதம் பாராது, அவர் குயவரே ஆனாலும் அவர் தம் குடிசையையும் தேடி இறைவன் ஓடி வருவான் என்று சொல்லப்படுகிற அற்புதமான, தத்துவத்தைத் தருகிற பெரியபுராணம் தமிழர்களின் தலைசிறந்த ஒரு வரலாற்று நூல் என்பதை நாம் புரிந்து கொள்ளமுடிகிறது.

பெரியபுராணம் ஒரு பக்தி நூல், அது பூசையறைக்குள்ளேவைத்துப் பூசிக்கவேண்டிய நூல் என்று மட்டுமே நமக்குப் பலரும் இதுகாறும் எடுத்துச் சொல்லி வந்திருக்கிறார்கள். பக்தி இலக்கியம் என்று சொல்லும்போது, அது மக்கள் வாழ்க்கைக்குப் பயன்படாத இலக்கியம் என்பதாக ஒரு எண்ணம் இந்த நாட்டில் ஏற்படுத்தப்பட்டிருப்பதனால், பெரிய புராணம் மக்கள் அனைவராலும் போற்றப்படாத ஒரு நிலை இன்று வரை இருந்து வருகிறது. பெரிய புராணம் சைவத் திருமுறைகளில் பன்னிரண்டாவது திருமுறை என்று கூறப்பட்ட காரணத்தால், 'இது சைவ நூல் தானே! இதை நாம் ஏன் படிக்க வேண்டும்?' என்று வைணவர்களும்கூட இந்நூலைப் புறக்கணிக்கக் கூடிய நிலை இன்று வரை இருந்து வருகிறது.

வாழையடி வாழையாக தமிழ் இலக்கியம் வளர்ந்து கொண்டே வந்திருக்கிறது என்ற போதும், சமய இலக்கியங்கள் என்ற அஸ்திவாரத்தின் அடிப்படையில்தான் அந்த வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் யாரும் மறந்து விடக்கூடாது. தமிழ் இலக்கிய வரலாற்றை நாம் கூர்ந்து பார்த்தால் முதலில் தொல்காப்பியமும் பிறகு சங்க இலக்கியங்களும் வருகின்றன. அவற்றை ஒட்டியே திருவள்ளுவர் உலகிற்கு வழங்கிய உலகப் பொது மறை திருக்குறள் வருகின்றது. பிறகு நம்முடைய வைணவப் பெரியார்கள் பாடியிருக்கிற திவ்வியப் பிரபந்தங்களும், சைவ சமய குரவர்கள் வழங்கியிருக்கிற தேவாரம் திருவாசகமும் தோன்றியுள்ளன. ஐம்பெருங்காப்பியங்கள், கம்ப இராமாயணம் ஆகியவை முன்னும்பின்னுமாகத் தோன்றிச் சிறப்பு பெற்றிருக்கின்றன. கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் சேக்கிழார் பெருமான் இயற்றிய பெரிய புராணம் வருகின்றது. அதைத் தொடர்ந்தும் சமய இலக்கியங்கள் பல சிற்றிலக்கியங்களாகத் தோன்றியிருக்கின்றன. சமய இலக்கியங்களினுடைய பரிணாம வளர்ச்சியாக கடைசியாக வருகிறவர் நம்முடைய வள்ளலார் இராமலிங்க அடிகளார். காலமாறுதலுக்கேற்ப வள்ளலார் வகுத்தபாதையில் அவருக்குப் பிறகு மகாகவி பாரதியாரும், பாவேந்தர் பாரதிதாசனும் புதியபாதையில் வருகிறார்கள். இன்றைக்கு இந்த இருபதாம் நூற்றாண்டிலேயும் பலப்பல கவிஞர்கள் தோன்றித் தமிழ் இலக்கியத்திற்கு அருந்தொண்டாற்றி வருகிறார்கள். வள்ளலார் பாடியிருப்பதைப் போல வாழையடி வாழையாக தமிழ் இலக்கியம் வளர்ந்துகொண்டிருக்கிறது. தமிழ்மொழியும் வாழ்ந்துகொண்டிருக்கிறது. தொல்காப்பியத்திலேயே தமிழ் நாட்டில் போற்றப்பட்ட தெய்வங்களைப் பற்றிய குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. பத்துப்பாட்டிலே முதற்பாடலாகப் போற்றப்படுவது திருமுருகாற்றுப்படையே ஆகும். ஆகவே தமிழ் வேறு, சமயம் வேறு என்று பிரித்துப் பார்க்க முடியாதபடி தமிழர் வாழ்வில் சமயமும் தமிழும் பின்னிக் கிடக்கின்றன. சமய இலக்கியங்கள் என்ற அஸ்திவாரம் இல்லையானால் தமிழ் இலக்கியம் என்று சொல்லுவதற்கே நாம் தகுதியற்றவர்களாகப் போயிருப்போம். ஆகவே இலக்கியங்களை அவை எந்தச் சமயத்தைச் சார்ந்தவை என்று கூட நாம் வீணாக வாதிட வேண்டுவதில்லை. அதனால்தான் திருக்குறளை இயற்றிய திருவள்ளுவர் எந்தச் சமயத்தைச் சார்ந்தவர்என்ற வீண் சர்ச்சையும் இன்று வரை நிகழ்ந்து கொண்டிருக்கிறது. எந்தச் சமய இலக்கியங்களும் ஒதுக்கப்பட வேண்டியவை அல்ல என்பதை நாம் முதலில் உணர்ந்து கொள்ள வேண்டும். ஐம்பெரும் காப்பியங்கள் என்று நாம் போற்றுகிறோமே அவை எந்தச் சமயத்திற்குரியவை என்று பார்த்தால் அவற்றில் ஒன்றேனும் சைவ, வைணவ சமயங்களுக்கு உரியன அல்ல. புத்த, சமண சமய இலக்கியங்கள்தான் ஐம்பெருங் காப்பியங்கள். ஆகவே, இலக்கியங்கள் இந்த நாட்டினுடைய—தமிழ் மண்ணினுடைய உண்மைகளை, ஒழுக்கங்களை, பண்பாட்டை, வரலாற்றைச் சொல்லுகின்றனவா என்பதைத்தான் நாம் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். அப்படிப் பார்க்கும்போது தமிழ் மண்ணிலே நடைபெற்ற நிகழ்ச்சிகளைத் தொகுத்துத் தருகிற இலக்கியமாக, தமிழ்ப் பண்பாட்டை, ஒழுக்கத்தை, தமிழர் வரலாற்றை விவரிக்கின்ற தலைசிறந்த இலக்கியமாகத் திகழ்வதுதான் சேக்கிழார் அருளிய பெரியபுராணம்.

பன்னிரண்டாம் நூற்றாண்டில் நீதிமன்றங்கள் எப்படிச் செயல்பட்டன தமிழகத்தில் என்பதை எடுத்துக் காட்டுகிறார் சேக்கிழார் பெரிய புராணத்திலே. ஒன்றை உண்மையென நீதிமன்றங்களில் மெய்ப்பிக்க வேண்டுமானால் மூன்றுவிதமான சான்றுகள் வேண்டும் என்று கூறுகிறார் சோழநாட்டின் தலைமை அமைச்சராகவும் வீற்றிருந்த சிறப்பிற்குரியவரான நம் சேக்கிழார் பெருமான்.

''ஆட்சியில் ஆவணத்தில் அன்றி மற்றயலார்
தங்கள்
காட்சியில் மூன்றில் ஒன்று காட்டுவாய் என்ன
முன்னே
மூட்சியிற் கிழித்த ஓலை படியோலை மூலஓலை
மாட்சியிற் காட்ட வைத்தேன் என்றனன்
மாயைவல்லான்''

என்ற சேக்கிழாரின் பாடல் ஒன்றே போதுமானது பெரியபுராணம் எத்தகைய தலைசிறந்த வரலாற்று நூல் என்று காட்டுவதற்கு.

அதைப்போலவே பெரியபுராணம் தமிழ்ப் பண்பாட்டை எடுத்துக் காட்டும் மகுடமான நூல் என்பதையும் தமிழ்ப் பேரறிஞர்கள் நமக்குளெடுத்துக்காட்டி விளக்கியிருக்கிறார்கள். காதலனுடன் உடன்போக்கு மேற்கொண்ட ஒரு காதலி வழியில் ஒரு மடத்தில்தங்கியிருக்கும்போது, அக்காதலன் அரவம் தீண்டிமாண்டு போகிறான். திருமணம் ஆகாத அந்நிலையில் அவளைத் தொட்டு அழமுடியாத வேதனையில் அவள் படும்பாட்டைச் சேக்கிழார் பெருமான்

''வாளரவு தீண்டவும் தான் தீண்டகில்லாள்' என்று நயம்படச் சுட்டுகிறார். திருமணத்திற்கு முன் காதலர்களே ஆயினும் தொட்டுப் பேசுவது தமிழர்ப் பண்பாடாகாது என்பதை எவ்வளவு நுட்பமாகவும் நயமாகவும் சேக்கிழார் பெருமான் பெரிய புராணத்தில் சுட்டியிருக்கிறார் என்பதை எண்ணும்போது தமிழர்களின் தலைசிறந்த பண்பாட்டு நூல் பெரியபுராணம் என்பது தெளிவு பெறுகிறது அல்லவா! ஆகவேதான் 'பெரிய புராணத்தை பூசை அறைக்குள் வைத்துப் பூசிக்க வேண்டிய ஒரு சமய நூல் என்று எண்ணாதீர்கள். அது தமிழரின் தலைசிறந்த பண்பாட்டு நூல். பண்பாட்டு நூலில் ஆங்காங்கே சமயக் கருத்துகளும் வருகிறதுஎன்று கூறுங்கள்' என்ற கருத்தையும் நான் தொடர்ந்து வற்புறுத்தி வருகின்றேன்.

ஆகவே, பெரியபுராணம், தமிழ்நாட்டின் தலைசிறந்தஇலக்கியம்-பத்தரை மாற்றுத்தங்கம் என்பதை இனியேனும்நாம்இந்தஉலகிற்கு எடுத்துச் சொல்லி ஆக வேண்டும். இந்தப் பத்தரை மாற்றுத்தங்கத்தைத்தான் இத்தனைக் காலம் சுரங்கத்திலே போட்டு மூடி வைத்திருந்தோம் நாம். தங்கத்தையும் சுரங்கத்திலே இருந்து தோண்டி எடுத்து வெளியிலே கொண்டு வந்தால், அது மண்ணோடு கலந்துதான் இருக்கும். அதை எப்படி நெருப்பிலே புடம் போட்டு வாட்டி பத்தரை மாற்றுத் தங்கமாக மின்ன வைக்கிறோமோ அதைப் போல பூசையறைக்குள் இத்தனை நாளும் பூட்டி வைக்கப்பட்டிருந்த தங்கமாகிய பெரிய புராணத்தையும் இனி இந்த உலகிற்கு நாம் பத்தரை மாற்றுத் தங்கமாக வழங்கிட வேண்டும்.

பெரியபுராணம் வரலாற்று நூல் மட்டுமல்ல; வாழ்க்கை நெறியை விளக்குவது மட்டுமல்ல அறிவியல் உண்மைகளையும் தெரிவிக்கிற நூலாகும். இன்றைக்கு உறுப்பு மாற்று சிகிச்சை என்பது மருத்துவத்துறையில் பரவலாகி வரும் ஒன்று. விஞ்ஞான வளர்ச்சியினால் ஒருவருடைய சிறுநீரகத்தை இன்னொருவருக்கு மாற்றலாம். ஒருவருடைய கண்ணை மற்றொருவருக்குத் தானம் வழங்கலாம் என்றெல்லாம் மருத்துவ விஞ்ஞானம் மகத்தான முன்னேற்றத்தைக் கண்டு வருகின்றது. சேக்கிழார் பெருமான் கண்ணப்பர் வரலாற்றிலேயே ஒருவர் கண்ணை எடுத்து மற்றொருவருக்கு வழங்க முடியும் என்பதையும் நம் தமிழ் மக்கள் பலநூறு ஆண்டுகளுக்கு முன்பே அறிந்திருந்தார்கள் என்பதையும் தம் பெரிய புராணம் வாயிலாக நமக்கு உணர்த்திக் காட்டியிருக்கக் காண்கிறோம். நமது தமிழ்மண் மருத்துவ ஆராய்ச்சி விஞ்ஞானத்திலேயும் தேர்ந்தவர்களைக் கொண்டிருந்த மண்தான். ஒருவர் கண்ணை மற்றொருவருக்கு வைக்கலாம் என்ற அறிவு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நம் தமிழ்ப் பெருமக்களுக்குத் தெரிந்திருக்கிறது. இதைப் பக்தியின் அடிப்படையில் சொன்னால் மற்றவர்கள் நம்புவதோடு பின்பற்றவும் செய்வார்கள் என்றுதான் சேக்கிழார் பெருமான் கண்ணப்ப நாயனார் வரலாற்றில் இந்த கண்தான உண்மையைச் சொல்லியிருக்கக் காண்கிறோம். எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்பே சேக்கிழார் பெருமான் தம் பெரிய புராணத்தில் கண்தானத்தைப் பற்றிச் சொன்னார். இன்றைக்கு அது உலகில் மிக எளிய ஒரு நிகழ்ச்சியாக நாளும் நடந்து கொண்டிருக்கிறது.

ஆகவே நம் தமிழர்கள் ஒன்றும் முட்டாள்களும் அல்ல, மூட நம்பிக்கை உடையவர்களும் அல்ல. உலகிற்கே வழிகாட்டும் அறிவுச் செல்வம் உள்ளிட்ட அனைத்துச் செல்வங்களும் பெற்றிருப்பவர்கள்தான். இவ்வளவையும் பெற்றிருந்தாலும் நம்முடைய சிறப்பை நாமே உணராமல் இளைய தலைமுறையினருக்கு எடுத்துப் பரப்பாத காரணத்தால் இன்றைக்கும் எளியவர்களாக- வறியவர்களாக வாழுகிற ஒரு அனுதாபத்திற்கு உரியவர்களாகவும் இருந்து கொண்டு இருக்கிறோம். எனவேதான் இந்த வரலாற்று இலக்கியத்தை-தொண்டுள்ளத்தை விளக்கும் தூய தமிழ் நூலை-தமிழர் ஒழுக்க நெறி போற்றும் வாழ்வியல் நூலை-வரும் தலைமுறையினர்க்கு விளக்கும் அரிய பணியை நாம் நிறைவேற்ற வேண்டும்.

''சென்ற காலத்தின் பழுதிலாத் திறமும்
இனிஎதிர் காலத்தின் சிறப்பும்
இன்றெழுந்தருளப் பெற்ற பேறிதனால்
எற்றைக்கும் திருவருள் உடையேம்''

என்ற சேக்கிழார் அருள்வாக்கிற்கு இணங்கவே சேக்கிழார் புகழ்ப் பரப்பித் தமிழர்தம் மெய்யான புகழையும், பெருமையையும் உலகிற்கு உணர்த்திக் காட்டிடுவோம். தமிழ்நெறியை வளர்த்துத் தமிழைக் காத்திடுவோம்...

## இறைவனைப் பேசா நாள் வீணாள்

**பெரும் பற்ற புலியூரானைப்**
**பேசாத நாள் எல்லாம் பிறவா நாள்**

**—அப்பரடிகள்**

# நவராத்திரி விழா உணர்த்தும் நுண்பொருள்கள்

**ஜி. இராமகிருஷ்ணன்**, ஐ.ஏ.எஸ்.
ஆணையாளர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34

**முன்னுரை**

இந்து சமயம் போற்றும் திருவிழாக்களில் புரட்டாசி மாதம் வளர்பிறையில் ஆதி பராசக்தியைப் போற்றிக் கொண்டாடப்படும் நவராத்திரி விழா ஒப்பற்ற ஒரு விழாவாகும். புரட்டாசி மாத மகாளய அமாவாசையன்று நவராத்திரி விழா ஆரம்பமாகிறது. ஒன்பது நாட்களில் முதல் மூன்று நாட்களில் துர்க்கையையும், அடுத்த மூன்று நாட்கள் மகாலட்சுமியையும், இறுதி மூன்று நாட்கள் சரசுவதியையும் மக்கள் வழிபட்டுப் போற்றுவர். பத்தாவது விஜயதசமி நன்னாளில் இம்மூன்று தெய்வங்களையும் படைத்ததான பராசக்தியைப் போற்றி வழிபாடுகள் செய்வது பண்டுதொட்டு நிகழ்ந்துவரும் வழக்கமாகும்.

**உடல்நலம், செல்வம், கல்வி**

சுவரை வைத்துச் சித்திரம் வரைவது போல, உடலை வைத்தே இவ்வையத்தில் வாழ்வாங்கு வாழ்தல் வேண்டும். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் ஆகும். தீர்க்க ஆயுளும் நோயற்ற வாழ்வும் அருளுபவள் அன்னை துர்க்கை.

''அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை
பொருளில்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு''

என்பது திருக்குறள். பொருள் இல்லாவிடில் இவ்வுலக வாழ்வு சிறக்காது.

''கல்லானே யானாலும் கைப்பொருளொன்
றுண்டாயின்
எல்லாரும் சென்றங் கெதிர்கொள்வர்—
இல்லானை
இல்லாளும் வேண்டாள்மற் றீன்றெடுத்த
தாய்வேண்டாள்
செல்லா தவன்வாயிற் சொல்''

என்ற பழம்பாடலும் பொருள் இல்லாத வறியவனை அவனை ஈன்ற தாயும்கூட விரும்ப மாட்டாள் என்று கூறிப் பொருளை ஒவ்வொருவரும் தேடிக் கொள்ள வேண்டும் என்று உணர்த்திட காண்கிறோம். அத்தகைய பொருளை அருளும் தெய்வம் மகாலட்சுமி.

பொருட் செல்வத்தைவிடவும் போற்றப் படுவது கல்விச் செல்வம் ஆகும்.

''கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை''.

என்பது திருக்குறள். இவ்வையகத்தில் வாழும் ஒவ்வொருவருக்கும் கண்போன்றது கல்விச் செல்வம். கல்வி அற்றோர் வாழ்க்கை சிறப்பினைப் பெறாது.

''கண்ணுடையர் என்பவர் கற்றோர்
முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்''

என்கிறார் திருவள்ளுவர். இத்தகைய கல்வியைத் தரும் தெய்வம்சரஸ்வதி.

உடல்நலம், பொருட்செல்வம், கல்விச் செல்வம் இம்மூன்றும் மாந்தர் வாழ்விற்கு இன்றியமையாத தேவையாகும். இம்மூன்றையும் அருளும் தெய்வச் சக்திகளான துர்க்கை, மகாலட்சுமி, சரஸ்வதி ஆகிய முத்தேவியரை வழிபடும் ஒப்பற்ற விழாவாகத்தான் நவராத்திரி விழா சிறப்புறக் கொண்டாடப்படுகிறது.

''தனம்தரும் கல்விதரும் ஒருநாளும்
தளர்வறியா
மனம்தரும் தெய்வ வடிவும்தரும் நெஞ்சில்
வஞ்சமில்லா
இனம்தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர்
என்பவர்க்கே
கனம்தரும் பூங்குழலாள் அபிராமி
கடைக்கண்களே''

என்ற அபிராமி அந்தாதிப் பாடல் தனம், கல்வி, தளர்வறியா மனம் (உடல்நலம்) என



**அறநிலையத்துறையின் ஆணையாளர்**
**திருமிகு ஜி. இராமகிருஷ்ணன் ஐ.ஏ.எஸ்., அவர்கள்**

அடிப்படைத் தேவைகள் அனைத்தையும் அன்னையே வழங்குவாள் என்று போற்றி உரைத்தல் ஈண்டு உணரத்தக்கது.

**நவராத்திரி விழா போற்றும் ஒப்பற்ற ஒரு பரம்பொருள்**

மகிடன் என்ற எருமைத்தலையுடன் கூடிய அரக்கன், சிவபெருமான், திருமால் பிரம்மாமுதலிய முத்தேவர்களாலும்கூட வெல்லமுடியாத மகாவலிமை வாய்ந்தவனாக இருந்தான் என்றும், முத்தேவர்களின் முறையீடு கேட்டு ஆதிபராசக்தி சிம்ம வாகனத்தில் எழுந்தருளி மகிசனுடன் போரிட்டு அவனைச் சம்காரம் செய்தாள் என்றும் தேவி பாகவதம் கூறும் புராண வரலாறு இங்கு நுணுகி ஆராயத் தக்கது.

'அரணம் பொருள் என்று அருள்ஒன்றில்லாத அசுரர் தங்கள்
முரண்அன்று அழிய முனிந்த பெம்மானும் முகுந்தனுமே
சரணம் சரணம் எனநின்ற நாயகி தன்னடியார்
மரணம் பிறவி இரண்டும் எய்தார் இந்த வையகத்தே''

என்று அபிராமி பட்டரும் சிவபெருமானும் திருமாலும் வேண்டிச் சரணமிட்டு முறையிட பராசக்தி தோன்றினள் என்று பாடியிருக்கக் காண்கிறோம்.

உலகம் அனைத்தையும் ஒப்பற்ற ஒரு பரம்பொருளே படைத்துக் காத்து, அழித்து எல்லையில்லா அருள்விளையாட்டினை நடத்தி வருகின்றது என்பது கண்கூடு. அப்பரம் பொருளையே பராசக்தி என்பதாக இந்நவராத்திரி விழாவின்போது போற்றி வழிபாடு செய்கின்றோம். சைவரும் வைணவரும் மற்றமற்ற சமயத்தவரும், ஏன் கடவுளே இல்லை என்னும் நாத்திகரும்கூட அண்டங்களை ஆளுகைசெய்யும் ஒப்பற்ற ஒரு சக்தி-பராசக்தி உண்டென்று ஒப்புவர். அத்தகைய பராசக்தி பெயர்களுக்கு அப்பாற்பட்டது. பெயர்களைக் கூறி வழிபடும்போது தானே என் தெய்வம் பெரியது, உன் தெய்வம் சிறியது என்ற வேற்றுமை உணர்வு உண்டாகிறது. அவ்வாறு பெயர்கள் இன்றி அண்டங்களை ஆளும் ஒரு சக்தியைப் பராசக்தி எனப் போற்றி வழிபடும் போது வேற்றுமையாவும் மறைந்து 'ஒன்று பரம்பொருள், நாம் அதன் மக்கள்' எனும் தெளிவு உண்டாகிறது. 'ஒன்றே குலம்ஒருவனே தேவன்' என்ற திருமூலர் கருத்தும், 'ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு' என்ற பட்டினத்தார் வாக்கும் ஏற்றம் பெறுவது இந் நவராத்திரி விழாவினால் தான் என்பது இப்போது தெளிவாகிறது அல்லவா?

தமிழ் மூதாட்டி ஔவையாரும்
''புண்ணியம் ஆம் பாவம்போம் போனநாள் செய்தஅவை
மண்ணில் பிறந்தார்க்கு வைத்தபொருள்— எண்ணுங்கால்
ஈதொழியவேறில்லைஎச்சமயத்தார்சொல்லும்
தீதொழிய நன்மை செயல்''

என்று சமய ஒற்றுமையை வற்புறுத்திப் பாடியிருக்கிறார் அல்லவா? அத்தகைய சமய ஒற்றுமை உணர்வையே நவராத்திரி விழாவும் நமக்கு உண்டாக்குகின்றது. அதனால்தான்

(தொடர்ச்சி 30-ஆம் பக்கம்)

# திருமுறைத் தேன்துளிகள் !

ஈரோடு த. விசுவநாதன்

**திருப்பாண்டிக் கொடுமுடி**

இறைவன்—கொடிமுடி நாதர்
இறைவி—பண்மொழி நாயகி
பதிகங்கள் — சம்பந்தர் 1 - அப்பர் 1 சுந்தரர் 1.

இத்தலம் ஈரோட்டிலிருந்து 3 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இரயிலடி உண்டு. ஈரோடு-திருச்சி வழியில் உள்ளது.

**கொடுமுடியாரும் — மகுடபதியும்**

கோடு என்றால் மலை. முடி என்றால் சிகரம். கொடுமுடி என்றால் மலைச்சிகரம் என்பது பொருள். விந்தியமலை முகட்டைத் தமிழ் முனிவர் அகத்தியர் தரை மட்டமாக்கி னார். அந்தத் தரையாகிய மலைச் சிகரத் திலே உள்ள ஆலயம். எனவே கொடுமுடி எனப் பெயர் பெற்றது. கொடுமுடியிலே வீற்றிருக்கும் பெருமான்..எனவே இவர் கொடு முடிநாதர் எனப் பெயர் பெற்றார். பொருள் புரியாத-தமிழ் மரபு தெரியாத-வடமொழி யாளர் பெயர் மாற்றம் செய்தது கொடுமை யிலும் கொடுமையாகும். முடி என்பதனைச் சிரம் எனக் கொண்டு, சிரத்திலே இருப்பது மகுடம் எனக் கொண்டு, பதி என்றால் தலை வன் எனக் கொண்டு மகுடபதி என மாற்றி னர். ஞானசம்பந்தப் பெருமான் பாடல் தோறும் பாண்டிக் 'கொடு முடியாரே' என்றே முடிக்கிறார். பாண்டிய மன்னன் ஒருவரின் உடலிலே இருந்த கறையானது இப்பெரு மானை வழிபட்ட பின் நீங்கியது. எனவே இப்பதி பாண்டிக் கொடுமுடி என்பது கோயில் பெயராகவும், கறையூர் என்பது ஊர்ப் பெய ராகவுமாயிற்று எனத் திருமுறைகளில் பேசப் படுகிறது.

இத்திருத்தலம் காவிரியாற்றங்கரையிலே அமைந்த திருத்தலம். கங்கையிற் புனிதமான காவிரி கொடுமுடி நாதன் திருக்கோயிலை ஒட்டியே செல்கிறது. எங்கெங்கு நோக்கினும் இனிய பொழில்களும் நெடியவயல்களும் இனிய நறுஞ் சோலைகளும் நிறைந்து இயற்கை வளம் கொஞ்சும் அழகிய ஊர். இத்தலம் திருமால், பிரமன் இருவரும் வழிபாடு செய்து தியானம் செய்த அருள் தலம். இத்தொன்மையான ஆலயத்திலே திருமால் ஆலயமும் உண்டு. பிரமன், தலமரமான வன்னி மரத்தடியில் தியானத்திலே உள்ள தலம். ஞானசம்பந்தப் பெருமான், அப்பரடிகள், சுந்தரமூர்த்தி நாய னார் ஆகிய மூவரும் பதிகம் பாடியுள்ளனர். மாணிக்க வாசகப் பெருமான் தம் திருவாசகப் பாடலிலே 'பாண்டி வெள்ளமே' என்று குறித் துள்ளார். மூவரும் தேவர்கள் வழிபட்ட செய்தியைத் தம் பதிகங்களிலே குறிப்பிடுகின்ற னர்.

**மன்னிக்கும் மாண்பு**

குழந்தைகள் எப்போதும் வினா எழுப்பிக் கொண்டே இருக்கும். பார்க்கின்ற பொருள் எல்லாம் குழந்தைகட்குப் புதுமையாய் இருப்ப தனால் கேள்வி கேட்டுக் கொண்டே இருக்கும் புத்திசாலித்தனமான குழந்தைகள். நம்ஞானக் குழந்தையான சம்பந்தமூர்த்தி அவர்கள் வினா எழுப்பினால் விடை யார் தருவது? எனவே அவரே வினாவும் எழுப்பி விடையும் தரு கிறார்.

எங்கள் திருப்பாண்டிக் கொடுமுடிப் பெரு மான் எங்கே இருக்கிறார் தெரியுமா! என வினா எழுப்பி விடையும் தருகிறார்.

எங்கள் பெருமாட்டி, 'பெருமானே உன்னை ஒருபோதும் நான் பிரியமாட்டேன். உன்னிலே ஒரு கூறாக நான் இருக்கவேண்டும் எனப் பன்னெடு நாள் தவம் புரிந்தார். கொங்கு நாட்டுத் திருத்தலங்கள் ஏழில் ஒன்றான திருச்செங்கோட்டில் பெருமான் மனம் உவந்து வேண்டுவோர் வேண்டுவது ஈயும் தன்மையான பெருமாட்டிக்குத் தன் மேனியிலே சரிபாதி ஈந்தான். அதனால் மங்கை பங்கன் மாதொரு பாகன் எனப் பெயரும் கொண்டார். எனவே எங்கள் பெருமான் திருமேனி, பெண் அமரும் திருமேனி. ஆம்! தன் திருமேனியிலே பெரு மாட்டியை அமர்த்தியுள்ளார். ஏன் தெரியுமா! தான் தியாகேசன் என்பதைக் காட்ட. தன்னை நாடி வருபவர்களுக்குத் தன்னிடம் உள்ளதைத் தான் உலகர் தருவர். ஆனால் எம்பெரு மானோ தன்னையே தரும் தயாநிதி-அவனை அடைந்தால் ஏதும் பெறலாம். 'அருளதே' சத்தியாகும் என்று போற்றும் சாத்திரம். என்னடி வணங்கும் அடியவர்க்கு அருள் செய்ய வேறெங்கும் செல்ல வேண்டியதில்லை எனத் திருமேனியிலேயே ஒரு கூறாக வைத்துள்ளான். அப்படிப்பட்ட பெருமானை உணர ஏதேனும் அடையாளம் தேவையா? அதையும் சொல் கிறேன். ஒன்றல்ல மூன்று அடையாளம் சொல் கிறேன். உலக வழக்கிலே ஒரு முறைக்கு மூன்று முறை சொல்கிறேன் என்பார்களே! அதுபோலமூன்று அடையாளம் சொல்கிறேன் கேளுங்கள். அவன் கற்றைச் செஞ்சடையிலே பிறை சூடியுள்ளான், நெற்றிக் கண் கொண்

டுள்ளான்- காதிலே குழை அணிந்துள்ளான். இவை மூன்றும் உங்களுக்குக் காட்டும் அடையாளம்தான். அந்த அடையாளங்களின் பொருள் தெரியுமா! அதையும் நானே சொல்கிறேன். கற்றைச் செஞ்சடையிலே பிறை சூடியுள்ளான். கடலிலே திசை தெரியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கும் கலங்களுக்கு வழிகாட்டிட கலங்கரை விளக்கு இருக்கும். விளக்கொளி கண்டு இருளிலே தத்தளிக்கும் கலங்கள் கரை சேரும். அதுபோல பெருமான், பிறவிக் பெருங்கடலிலே தத்தளித்துக் கொண்டிருக்கும் உயிர்களைத் தன் அருள் ஒளி காட்டி தன் திருவடித் தாமரையைக் காட்டுவதற்காகத் தன் சடையிலே பிறையைச் சூடியுள்ளான். பிறை, - அறிவின் கலையின் சின்னம். கலை ஞானத்தினால் இறைவனை அறியலாம். அது மட்டுமல்ல சந்திரன் தன் குருவான வியாழ பகவானின் மனைவியின் கற்பழித்த மாபாவி. தன் தவறை உணர்ந்து, பெருமான் அடியிலே வீழ்ந்த சந்திரனைத் தலையிலே வைத்துக் கொண்டான். அவனைவிடப் பொல்லாதவர்கள் யார்? அவன் செய்த தவறை உணர்ந்து திருவடியிலே வீழ்ந்தான், அதுபோல் தவறு செய்வார் எவரும் திருந்தினால் அவர்களையும் மன்னித்து அருள் செய்வான். எத்தனை குற்றம் இயற்றிடினும் தாய் பொறுப்பாள். 'அன்பும் நின்னருளும் அன்றோ பராபரமே' என்றார் தாயுமானவர். இது யாருக்குமே இல்லாதது. இன்னொரு அடையாளம் சொல்கிறேன். அவனது நெற்றியிலே கண் உடையவன். அதனால்தான் முக்கண்ணன் என்ற பெயரும் பெற்றான். சந்திரன் போன்று தவறை உணர்ந்து காலிலே வீழ்ந்தால் தலையிலே வைத்துக் கொள்வான். மன்மதன், தவமிருந்த பெருமான் திருமேனிமேல் மலர்க் கணை தொடுத்தான். கண் திறந்தார். மன்மதன் எரிந்து சாம்பலானான். அது எதைக் காட்டுகிறது தெரியுமா! பெருமான் திருமுன் சென்றால் இந்த உயிரைப் பற்றியுள்ள காம குரோத லோப மதமாச்சரியங்களைச் சுட்டெரிக்க நெற்றிக் கண்ணொடு உள்ளான் என்பதனை, நாம் செய்த பாவங்களைச் சுட்டெரிப்பான். அதற்காகவே நமக்காகவே அவன் கண் அமர் நெற்றியனாக உள்ளான் என விளக்குகிறார் திருஞான சம்பந்தர்.

எட்டாத செஞ்சடையிலே இருக்கிற பிறையின்பால் நம்மால் செல்ல முடியாது. எரிக்கும் விழி ஆகவே அணுக அச்சமாக உள்ளது என்கிறாயா! அச்சங் கொள்ளாதே, விழி தான் எரிக்கும் விழியே தவிர அதனை அடியவர்க்கெதிராக அவன் ஒரு நாளும் பயன் படுத்தியதில்லை. காதில் குழையோடு உள்ளான். மிகக் குழைந்த உள்ளத்தோடு உள்ளான். உன் உணர்வுகளை - எண்ணங்களை எதை வேண்டுமானாலும் சொல். செவிமடுக்க தயாராய் உள்ளான் என்பதனை காட்டவே 'காதமருங்குழை' யோடு உள்ளான். அந்தப் பெருமானின் அடையாளம் சொன்னேன் அவன் குணம் தெரியுமா! 'எண் குணத்தான் தாளை வணங்காத்தலை' என வள்ளுவர் சொல்கிறாரே அந்த எண் குணங்களாகிய

1. தன்வயத்தனாதல்
2. தூய உடம்பினன் ஆதல்
3. இயற்கை உணர்வினன் ஆதல்
4. முற்றுணர்தல்
5. இயல்பாகவே பாசங்களின் நீங்குதல்
6, பேரருளுடைமை
7, முடிவில் ஆற்றல் உடைமை
8. வரம்பில் இன்பம் உடைமை.

இந்த எண் குணங்களும் அமரும் குணப் பெருங்குன்று. எண் குணமமர்ந்தவன் மட்டு மல்ல. நீங்கள் எண்ணஉங்கள் மனத்தில் அமரும் குணம் அவனுடையது. நினைப்பவர் மனம் கோயிலாகக் கொள்வது அவன் இயல்பு, மானுடர் மற்றுமின்றி தேவாதி தேவர்களும் கூடி நின்று வழிபாடு செய்கின்ற திருத்தலம் இது. தேவர்களோடு தொடர்புடைய பெருமானை நாம் எங்கே நாடுவது? சென்றடைவது எனச் சஞ்சலம் அடையாதே. எங்கள்பாண்டிக் கொடுமுடியார் பண்ணிசைக்கும் பாடலிலே குடி கொண்டுள்ளார். பண்ணார் இன்தமிழாய் உள்ளவன். உனக்குத் தொடர்புடைய இன்பத் தமிழாய் உள்ளான் அப்பரமன்.

ஆம். பண்ணொடு இசைபாடு-பாடக் கேள், கொடுமுடி நாதன் பண்ணொடு அமர்ந்து நின்று அருள் செய்வான் என்று நமக்கு அறிவுறுத்துகிறார் ஞானசம்பந்தர்.

"பெண்அமர் மேனியினாரும் பிறை புல்கு
செஞ்சடையாரும்
கண்ணமர் நெற்றியினாரும் காது அமரும்
குழையாரும்
எண்ணஅமரும் குணத்தாரும் இமையவர்
ஏத்த நின்றாரும்
பண்அமர் பாடலினாரும் பாண்டிக்
கொடுமுடியாரே!"

**யார் பெரியவர்?**

நாவுக்கரசு பெருமான் இத்திருத்தலத்திற்கு எழுந்தருளுகின்றார். பெருமானை வாழ்த்தி வழிபடுகின்றார். நெஞ்சு நெக்குருகுகின்றது. ஊனடைந்த உடம்பில் பிறவி தானடைந்த உறுதியைச் சார வேண்டுமானால் வினை நாசமாக வேண்டும். வினை உள்ள வரை, உயிரானது இறையை அடைய முடியாது. வினையை நாசமாக்க வேண்டும். அதற்கு ஓர் எளியவழி உள்ளது. அது கொடுமுடியில் நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதன் தாள் வணங்குவதுதான். உலகத்திலே ஒவ்வொருவரும் தன்னைத் தானே பெரியவன் எனக் கருதுவர். ஆனால் கொடுமுடி நாதன் தான் உண்மையிலேயே பெரியவன். பெரியவனுக்கு இலக்கணம் என்ன! செயற்கரிய செய்வர் பெரியர் என்றார் வள்ளுவர். யாராலும் செய்ய முடியாதனவற்றை யார் செய்கிறார்களோ அவர்கள்தான் பெரியவர். என் வினையை நாசம் செய்ய வேறு யாராலும் முடியுமா? முடியாது. நாசமாக்க முடியாத நம் வினையை நாசமாக்கும் சிட்டன் (பெரியவன்) அப்பெரியவனே சிவன்.

அச்சிவன் ஜோதி வடிவாய் உள்ளான். சோதி தன்னைச் சார்ந்த பொருள்களையெல்லாம் வடிவை மாற்றி வண்ணத்தை மாற்றித் தன் வடிவை, தன் வண்ணத்தை வழங்குகிறது. அதுபோல ஜோதி வடிவான இறைவன் நம் வடிவத்தை வண்ணத்தை மாற்றி தன் வண்ணமாக்கிக் கொள்ள-இந்த உயிரை இறைத் தன்மையுடையவனாக ஆக்கிக் கொள்ள செழுஞ் சோதியோக உள்ளான்.

அது மாத்திரமல்ல, நிலம்,.நீர், நெருப்பு, காற்று, வான், சந்திரன், சூரியன், உயிர் என்ற எட்டு வடிவங்களிலும் கலந்து நின்று அருள் செய்கின்றான் பெருமான். நிலத்திலே திண்மையாகக் கலந்து என்று உணவுப் பொருட்களை கொடுக்கிறான். நீரிலே சுவையாகக் கலந்து தாகம் தீர்க்கின்றான். நெருப்பிலே சூடாக இருந்து காற்றிலே கலந்திருந்து, வானிலே மறைந்து நின்று, சந்திரனில் கலந்து தண்மை இன்பம் வழங்கி, கதிரவனில் கலந்து நின்று வெம்மையின்பம் ஈந்தும் உயிரிலே உயிர்க்குயிராய் உறைந்து நின்று நல்லவையும் தீயவையும் காட்டி அருள் செய்கின்றான். அப்படி அட்ட மூர்த்தத்திலும் கலந்து நின்று அருள் செய்கின்ற பெருமான் நாமெல்லாம் உய்யும் வண்ணம் ஆலமர் செல்வனாக அமர்ந்து நின்று பட்டனாக (குருவாக) ஞானாசிரியனாக இருந்து வழி காட்டுகின்றான். உயிர்க்கு உறுதியைச் செய்கின்றான். அந்தப் பெருமான் திருப்பாண்டிக் கொடுமுடியிலே நடனமாடுகின்றான். அந்த நட்டனைத் தொழுதால் நிச்சயம் நம் வினை நாசமாகும். எளிய வழி அதுதான்.

''சிட்டனைச் சிவனைச் செழுஞ்சோதியை
அட்டமூர்த்தியை ஆல நிழல் அமர்
பட்டனைத் திருப்பாண்டிக் கொடுமுடி
நட்டனைத் தொழ நம்வினை நாசமே''
—அப்பர்.

**பற்றுக பற்றினை**

சுந்தரமூர்த்தி நாயனாரின் பாடல்பெற்ற திருத்தலங்களிலேயே தனிச் சிறப்பு வாய்ந்தது இப்பாண்டிக் கொடுமுடிப் பதிகம் ஆகும். ஏனென்றால் பாடல்தோறும் திருஐந்தெழுத்தாகிய 'நமச்சிவாய' மந்திரத்தைச் சொல்லி ஏத்துகிறார். அதனால் இப்பதிகம் 'நமச்சிவாயத் திருப்பதிகம்' எனப் போற்றப்படும். இந்த அரிய திருப்பாடலிலே சுந்தரர் அரிய பல கருத்துக்களைத் தெரிவிக்கின்றார்.

'பற்றுக பற்று அற்றான் பற்றினை' என்றார் வள்ளுவர். உயிரே நீ பற்றுகளை விடு என்றால் விடமாட்டாய். உனக்குள்ள ஓராயிரம் பற்றுக்களோடு நான் சொல்லும் ஒரு பற்றினையும் வைத்துக்கொள் என்றார். இழப்பது என்றால்தானே கசக்கும். இருப்பதோடு இன்னொன்றையும் இணைத்துக் கொள்வதானால் அது இனிய செய்தியல்லவா நமக்கு. சரி. அது என்ன பற்று எனக் கேட்கிறாயா! பற்று இல்லாத பெருமான் திருவடியைப் பற்றிக்கொள். அது போதும். அதை ஏன் பற்றச் சொல்கிறேன் தெரியுமா! அது மற்ற பற்றுக் (ஆசை) களையெல்லாம் தானே விடச் செய்துவிடும்.

அற்றது பற்றெனில் உற்றது வீடு அல்லவா! பற்று உள்ளவரை வீடு பேறு, நிலையான பேரின்பம் கிடைக்காதே. அதனால் பற்றுவிட, பற்று அற்ற பெருமான் பாசத்தைப் பற்று என்றார் வள்ளுவர். பெருமானே என் மனம் மற்ற பற்றெதும் இன்றி உன் திருப்பாதமே பற்றியது; உன் பற்று ஒழிய வேறு ஒரு பற்றும் எனக்கு இல்லை என்பது நீயறியமாட்டாயா? திருக்கைலையிலே உனக்கு அணுக்கன் தொண்டனாயிருந்தபோது உன் நோக்கால் மாதரார் மேல் மனம் போக்கிடக் காதல் மாதரும் என் காட்சியில் நண்ணினர்.

''தென்புவி மீது தோன்றி மெல்லியலாளுடன் காதல் இன்பம் கலந்து அணைவாய்'' என ஆணை பிறப்பித்தாய்'. அந்த ஆணையைப் பெற்றதும் இந்த மண்ணில் வந்து பிறந்தேன். அந்த ஆணையைக் கேட்டு அஞ்சி நடுங்கிப் போனேன். ஆனால் அப்போதே பெருமானே நான் உன்னை

''கைகள் அஞ்சலி கூப்பிக் கலங்கி
செய்ய சேவடி நீங்கு சிறுமையேன்
மையல் மானுடமாய் மயங்குவழி
ஐயனே தடுத்தாண்டருள் செய்''

என வேண்டினேன்.

அப்படிப் பிறந்து இறந்து உழலும் வாழ்வைத் தடுத்தாண்டு அருள் செய் எனக் கோரியதை இன்று எனக்கு அருள் செய்து பூர்த்தி செய்து விட்டாய். ஆம். பிறந்தேன்; இனிப் பிறவாத தன்மை வந்து எய்திவிட்டதனாலே உன்னை மறப்பேன் என நினைத்துவிடாதே. நற்றவா உன்னை மறப்பறியேன்; மறந்தால் உயிர் தரியேன். கற்றவர்கள் கற்றதினால் ஆய பயன் உன் நற்றாள் தொழுதல் என உணர்ந்து தொழும்போது நான் வாளாயிருப்பேனா! தொழுவது உடலின் செயல்; ஏத்துதல் சிந்தையின் செயல்; உன் திருநாமம் சொல்வது என் நாவின் செயல்.

எனவே என் சிந்தை உன்னை எண்ணித் தொழ, என் கைகள் உன்னைப் பணிந்தேத்த, என்நா உன் நாமத்தையே சொல்லும். பாண்டிக் கொடுமுடிப் பெருமானே! ஒருக்கால், நான் மறந்தாலும் என் நா உன் நமச்சிவாயத் திருநாமத்தை ஒரு நாளும் மறவாது. ஏன் தெரியுமா? அவ்வாறு நான் என் நாவைப் பழக்கியுள்ளேன்.

''மற்றுப்பற்றெனக் கின்றி நின்திருப்
பாதமே மனம் பாவித்தேன்
பெற்றலும் பிறந்தேன் இனிப் பிறவாத
தன்மை வந்தெய்தினேன்
கற்றவர் தொழுதெத்துஞ் சீர் கறையூரில்
பாண்டிக் கொடுமுடி
நற்றவா உனை நான் மறக்கினுஞ்
நா சொல்லும் நமசிவாயவே.''

# கீதைக் குறள்கள்



அறநெறியண்ணல் கி. பழநியப்பனார்

### சன்னியாசமும் தியாகமும்

(குறிப்பு: உண்மையான சன்னியாசத்தின் தன்மையையும் தியாகத்தின் தன்மையையும் அருச்சுனன் அறிய விரும்புகிறான்) (18[1)

எக்கர்மத் தால்ஆசை கைகூடும் என்றெண்ணி
அக்கர்மத் தைநாடா மல் (18[2)

துறத்தலே உண்மைத் துறவாகு மென்று
சிறந்தஅறி ஞர்கூறு வர் ( ,, )

கருமப் பலனைக் கருதாமை யொன்றே
பெருந்தியா கச்செயலென் பர். ( ,, )

சிலர்கருமம் யாவுமே தீயன என்று
விலக்கிட வேண்டுமென பர். (28[3)

தவம்தானம் வேள்வி தவிரமற் றெல்லாம்
அவமாகும் என்போரும் உண்டு ( ,, )

மாந்தருள் மாமணியே! மூன்றாய்த்
தியாகத்தை
ஆய்ந்தோர் வகுத்தமுறை கேள்; (18[4)

நல்லறிஞ ருக்கென்றும் தூய்மையை நல்குவன
பல்வேள்வி தானம் தவம் (18[5)

அருச்சுனா! அக்கருமம் பற்றற்ற தாயின்
பெருமை மிகவுடைத் தாம். (18[6)

விதித்த கருமத்தை விட்டுவிடல் என்றும்
அதிதாம தத்தின் துறவு. (18/7)

உடல்வருந்து மென்றே உரியகரு மத்தை
விடல்ராச தத்தின் துறவு (18[8)

இராசதம் தாமதம் ஏற்ற துறவு
தராது துறவின் பயன் ( ,, )

அயராது தன்கடனைப் பற்றின்றி ஆற்றல்
உயர்சாத் விகத்தின் துறவு (18[9)

ஐயமின்றி சாத்விக ஆன்றோர் எதிர்கொள்
துயர்இன்பம் ஒன்றாய்க் காண் பர் (18[20)

ஓயாது கர்மம் உடல்பெற்றோன் செய்வதில்
சாயாப்பற் றின்மைத் துறவு (18[11)

இறந்தபின்பும் இன்பம்துன் பம்கூடிச் சார்ந்த
பிறப்பாம் துறவுகொள்ளா தார்க்கு. (18[12)

சாக்கியம் சாற்றிடும் ஐந்து முறைகளை
நோக்கிப் பயன்பெறு வாய். (18[13)

செய்கைக்கு மூலமாய் நிற்பது செப்பிடின்
மெய்யாம் உடல்ஒன் றுடன் (18[14)

கருத்தா கருமஞா னேந்திரி யங்கள்
அருட்தெய்வம் சேர்ந்தஐந் தாம் ( ,, )

பாரில் மனம்வாக்குக் காயம்செய் பாவபுண்யம்
தேரி(ன்) இவை காரண மாம். (18[15)

ஆன்மாவே செய்கைக்குக்காரண மாம்என்போர்
ஊன்றியுண் மையறியா தார் (18[16)

அகங்கார மும் பற்றும் அற்றோர் கொல்
தொழிலால்
நுகந்திடார் பாவமத னால் (18[17)

அறிவு அறிபொருள் மற்றும் அறிவோன்
செறிந்தகர்மத் தூண்டுகோல் கள். (18[18)

கருவி கருமம் கருத்தாஇம்மூன்றும்
கருமங்கள் தங்குமிட மாம். ( ,, )

கருத்தா கருமம்ஞா னம் நடாத் தும்பல்
திருகுகுண பேதங்கள் கேள் (18[19)

பல்வேறு பண்டங் களிலும் அழியாவோர்
தொல்பொருளைச் சாத்விகம்கா ணும் (88/20)

பல்பொருளைப் பல்விதமாய்க் காண்போர்
குணத்தினைத்
தொல்லோர் இராசதமென் பர்.
(18[21)

அற்பப் பொருளை அறியாது தாமதம்
போற்றி மகிழ்ந்திடு மாம். (18[22)

விதிவழு வாது விருப்புவெறுப் பின்றி
அதில்பயனே தும்கரு தாது. (18[23)

செய்யும் கருமங்கள் யாவும் சிறப்புடன்
செய்வது சாத்விக மாம். (3,, )

ஆவலால் மூண்ட அகங்காரத் தோடுமிகத்
தீவிரமாய்ச் செய்கருமங் கள் (18[24)

யாவும் இராசத கர்மங்க ளாமென்றே
யாவரும் நன்கறி வர் ( ,, )

(தொடர்ந்து வரும்)

# பன்னிரு ஆழ்வார்கள்

டாக்டர் பருத்தியூர் சந்தானராமன்

தமிழ்மொழியும், வைணவ நெறியும் தழைத்திடத் திருவவதாரம் செய்த மகான்கள் தான் ஆழ்வார்கள். திருமாலின் இராமாவதாரத்தின் பொழுது அவரது பள்ளியணையாகிய ஆதிசேஷன் இலக்குவனாக வந்தார். சங்கும் சக்கரமும் பரதசத்ருக்கனர்களாக வந்தன. அதுபோல் திருமாலைச்சேர்ந்த தெய்வீகப் பொருட்கள் பலவற்றின் அம்சமாகவே ஆழ்வார்கள் அவதரித்தனர். சாதி வேறுபாடுகளைக் கடந்து சமயத் தொண்டாற்றிய ஆழ்வார்கள் பன்னிருவர் ஆவர்.

கருணை முதலான பகவத் குணங்கள் (இறைப் பண்புகள்) ஆழங்காண முடியாத கடல் போன்றவை. அக்கடலில் ஆழ்ந்து இறையனுபவத்தில் மூழ்கியதால் அவர்களை ஆழ்வார்கள் என்றனர். அறிவினால் ஆழங் கண்டிட அப்பாற்பட்டு நின்றவர்கள் ஆழ்வார்கள். கடவுளையறியும் ஆழமான அறிவு முதிர்ச்சியால் அவர்கள் ஆழ்வார்கள் எனப்பட்டனர். நாமெல்லாம் உலகியல் மயக்கத்தில் ஆழ்ந்திருப்பவர்கள். அதற்கு மாறாக அம் மகான்கள் இவ்வுலகத்தில் இருந்தாலும் இறையனுபவத்தில் ஆழ்ந்திருந்தவர்கள்.

பகவத் குணத்தில் ஆழ்ந்தது போலவே, அவர்கள் தென்மொழியாகிய தமிழின் இனிமை மையில் திளைத்தவர்கள். தமிழ்க் கடலில் ஆழ்ந்து நல்முத்துக்கள் போன்ற பாடல்களை அளித்தவர்கள்.

பன்னிரு ஆழ்வார்களுமாகப் பாடியருளிய பாடல்கள் நாலாயிரம் ஆகும். தெய்வீகமான பலவகைப் பிரபந்தங்களை உள்ளடக்கிய அவற்றை 'நாலாயிரத்திவ்ய பிரபந்தம்' என்று போற்றுகின்றோம் திருமாலின்அருளாலும் மக்கள் மீது கொண்ட கருணையினாலும் அவர்கள் அளித்த திருப்பாடல்களை அருளிச் செயல்கள்' என்றும் அழைக்கின்றோம். நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதியின் காப்புச் செய்யுள் ஆழ்வார்களையும் பட்டியலிட்டுக் காட்டுகிறது.

பொய்கை, பூதன், பேயார் பொன்மழிசைக்
கோன், மாறன்
செய்யமதுரகவி, சேரர்பிரான்வையகமென்
பட்டர்பிரான், கோதை, தொண்டர் பாதப்
பொடி, பாணன்
கட்டவிழ்த்தார் வாட்கலியன் காப்பு.

1. பொய்கையாழ்வார்
2. பூதத்தாழ்வார்
3. பேயாழ்வார்
4. திருமழிசையாழ்வார்
5. நம்மாழ்வார் (மாறன்)
6. மதுரகவியாழ்வார்
7. குலசேகர ஆழ்வார் (சேரர்பிரான்)
8. பெரியாழ்வார் (பட்டர்பிரான்)
9. ஆண்டாள் (கோதை)
10. தொண்டர் அடிப்பொடி ஆழ்வார்
11. திருப்பாணாழ்வார்
12. திருமங்கையாழ்வார் (கலியன்)

இப்பன்னிருவரின் தோற்றம், வாழ்க்கை அருளிச்செயல்கள் ஆகியவை குறித்துச் சற்று விளக்கமாகவும் சுருக்கமாகவும் தனித்தனியே காண்போம்.

## 1. பொய்கையாழ்வார்

முத்தி அளிக்கும் ஏழு திருத்தலங்களில் ஒன்றான காஞ்சி மாநகரத்தினைத் தலைநகராகக்கொண்டு விளங்கியதுதொண்டைநாடு. ''சான்றோர்உடைத்து'' எனப் புகழப்பட்ட அத்தொண்டை நாட்டில் திருவெஃகா என்ற திருத்தலத்தில் உள்ள பொய்கையொன்றில் அவதரித்தவரே பொய்கையாழ்வார் என்று பெயர் பெற்றார். இவர் துவாபரயுகத்தில் திருமாலின் பாஞ்ச சன்னியம்' என்னும் திருச்சங்கின் அம்சமாகத் தோன்றினார் என்பர். சிவபெருமானுக்குத் திருவாதிரை உகந்ததுபோல் திருமாலுக்கு உகந்தது திருவோணம். அத்திருவோணத்தில் அவதரித்தார் முதல் ஆழ்வாராகிய பொய்கையார்.

திருவெஃகா, திருவரங்கம், திருக்கோவிலூர், திருவேங்கடம் முதலிய திருத்தலங்கள் குறித்து இவர் பாடியுள்ளார்.

அந்தாதிப் பாக்கள் நூறு கொண்ட பிரபந்தம் 'முதல் திருவந்தாதி' என்று போற்றப்படுகின்றது.

திருமாலின் குடை, இருக்கை, பள்ளியணை, திருப்பாதுகை முதலிய அனைத்துமாக ஆதிசேஷன் விளங்குவதை கீழ்க்கண்ட முதல் திருவந்தாதிப் பாடல் குறிப்பிடுகின்றது.

சென்றால் குடையாம், இருந்தால் சிங்
காசனமாம்
நின்றால் மரவடியாம், நீள்கடலுள்—என்றும்
புணையாம், மணிவிளக்காம், பூம்பட்டாம்
புல்கும்
அணையாம் திருமாற்கு அரவு.

## 2. பூதத்தாழ்வார்

திருமாலின் வில்லினைச் 'சார்ங்கம்'என்பர். அதுபோல் அவர் கையிலேத்தும் கதாயுதத்தை 'கௌமோதகி' என்பர். அக்கதா



யுதத்தின் அம்சமாகத் தோன்றியவர்தான் பூதத்தாழ்வார். கடல்மல்லை என்னும் மாமல்லபுரத்தில் திருமால் சயனத்திருக்கோலத்தில் எழுந்தருளியுள்ளார். அங்குக் குருக்கத்திப் புதரின் நடுவே, ஐப்பசிஅவிட்ட நட்சத்திரத்தில் திருவவதாரம் செய்தார் பூதத்தார்.

'மகத் பூதம், ப்ருகத்பூதம்' என்றெல்லாம் வடமொழி நூல்கள் திருமாலைஅழைத்தன. அவ்வாறே ''கடல் வண்ணன் பூதன்'' முதலான தமிழ்ச் சொற்றொடர்களால் இவ்வாழ்வார் திருமாலைப் போற்றிப் புகழ்ந்ததால் இவரைப் பூதத்தாழ்வார் என்றே அழைத்தனர்.

திருவரங்கம், திருக்கோஷ்டியூர், திருக்குடந்தை, திருநீர்மலை முதலிய தலங்களைக் குறித்து இவர் பாடிய பிரபந்தம் நூறு பாடல்களைக் கொண்ட இரண்டாம் திருவந்தாதி ஆகும்.

தவப்பயனால், திருமாலுக்குப் பாமாலை சூட்டிய தானே 'பெருந்தமிழன்' என்று இவர் கூறிக்கொள்ளும் திறம் சிந்தித்து மகிழ்தற்குரியது.

''யானே மாதவம் செய்தேன் ஏழ்பிறப்பும்
எப்போதும்
யானே தவமுடையேன் எம்பெருமான்! யானே
இருந்தமிழ் நல்மாலை இணையடிக்கே
சொன்னேன்
பெருந்தமிழன் நல்லேன் பெரிது''.

## 3. பேயாழ்வார்

தொன்மையும் பெருமையும் வாய்ந்த தலம் சென்னையைச் சார்ந்த திருவல்லிக்கேணி. இத்தலத்தின் தென்திசையில் உள்ள திருமயிலையும் பல்லாற்றானும் சிறப்புப் பெற்ற தலமாகும். உலகப் பொதுமறை தந்த வள்ளுவர் தொடங்கி, இன்று நம்மிடையே வாழ்ந்து சமயநெறி வளர்த்து வரும் குருஜி சுந்தரராம சுவாமிகள் வரை சங்கிலித் தொடர் போல் எக்காலத்திலும் பல சான்றோர்கள் தோன்றி வாழும் திருத்தலம் மயிலாப்பூர். இங்கு ஆதிகேசவப்பெருமான் திருக்கோவிலின் கிணற்றில் செவ்வல்லிப்பூவில் உதித்தார் பேயாழ்வார். திருமாலின் 'நந்தகம்' என்ற வாட்படையின் அம்சமாக ஐப்பசி சதயத்தில் பேயாழ்வார் திருவவதாரம் செய்தார்.

இவர் பக்திப் பரவசத்தால் அழுதல் விம்முதல், சிரித்தல், ஆடுதல், பாடுதல். போன்ற செயல்களில் ஈடுபடுவார். அச்செயல்கள் பார்ப்பவர்க்குப் பேய்பிடித்தாரின் செயல்போல் தோன்றும் எனினும் அதனைப் பொருட்படுத்தாது தன் வழி நடந்த இவரை 'பேயாழ்வார்' என்றே அழைத்தனர்.

''பேயரே எனக்கு யாவரும் யானுமோர்
பேயனே யாவர்க்கும்; இது பேசியென்;
ஆயனே! அரங்கா! என்று அழைக்கின்றேன்
பேயனாய் ஒழிந்தேன் எம்பிரானுக்கே.''

என்று ஆழ்வார் தாமே அதனை உரைக்கின்றார். திருவரங்கம், திருக்குடந்தை, திருவிண்ணகரம், திருவல்லிக்கேணி முதலிய திருத்தலங்களைப் பற்றிய இவரது நூறு பாடல்களும் மூன்றாம் திருவந்தாதி என்று போற்றப் படுகின்றது.

சென்னை மயிலை அருண்டேல் தெருவில் பேயாழ்வாரின் திருவவதாரத் தலம் உள்ளது. ஆங்கிலேயர் பெயரால் அழைக்கப் படும் அத்தெருவின் பெயரை 'பேயாழ்வார் தெரு' என்று மாற்றம் செய்ய தமிழ்ப்பற்றும் சமயப் பற்றும் உடையோர் ஆவன செய்தல் அவசியமாகும்.

திருமாலின் புகழைப் பேசினால் தேஜஸ் ஆற்றல், செல்வம், குடிப்பிறப்பு ஆகிய அனைத்தும் எய்தலாகும் என்றுரைக்கும் மூன்றாந் திருவந்தாதிப் பாடல் வருமாறு :—

''தேசும், திறலும், திருவும், உருவும் ;
மாசில் குடிப்பிறப்பும், மற்றவையும்-பேசில்
வலம்புரிந்த வான்சங்கம்கொண்டான் பேர்ஓத
நலம் புரிந்து சென்றடையும் நன்கு''.

## முதலாழ்வார்களின் சிறப்பு

முதலாழ்வார்கள் என்று போற்றப்படும் பொய்கையார், பூதத்தார், பேயார் ஆகிய மூவரும் தாய் வயிற்றில் பிறவாது தரணியில் திருவவதாரம் செய்தவர்கள். இராமன் பரதன், இலக்குவன் ஆகிய மூவரும் முறையே புனர்பூசம், பூசம், ஆயில்யம் என்று அடுத்தடுத்த நட்சத்திரங்களில் அவதரித்தனர். அது போல் பெய்கையார் திருவோணத்திலும் பூதத்தார் அவிட்டத்திலும் பேயார் சதயத்திலும் திருவவதாரம் செய்தனர்.

திருமாலின் சேனைத் தலைவராக விளங்குபவர் விஷ்வக்ஸேனர். இவரைத் 'தும்பிக்கையாழ்வார்' எனவும் அழைப்பதுண்டு. இவரே வைகுண்ட உலகத்திலிருந்து பூவுலகம் வந்து முதலாழ்வார்களுக்கு ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு உரிய 'பஞ்ச சம்ஸ்காரங்கள்' என்னும் நியதிகளைச் செய்தருளினார். திருவெட்டெழுத்து உபதேசமும் அதன் பொருள் விளக்கமும் செய்தருளினார். அதனால் முதலாழ்வார்கள் மிகச் சிறந்த ஞானிகளாகவும் யோகிகளாகவும் விளங்கினர்.

## முதலாழ்வார்கள் சந்திப்பு

முதலாழ்வார்கள் மூவரும் சமகாலத்தவர்கள். எனினும் தமக்குள் அறிமுகம் இல்லாமல் இருந்தனர். தனித்தனியே திருமால்நெறி பரப்பிய மூவரையும் ஓரிடத்தில் ஒன்று சேர்க்கத் திருவுள்ளம் கொண்டார் திருமால். திருக்கோவிலூர் செல்ல வேண்டுமென்ற அவாவினை மூவருக்கும் தோற்றுவித்தார். திருப்பதியாகிய திருக்கோவிலூரை அடைந்தார் பொய்கையார். அங்கு மிருகண்டு முனிவரின் ஆச்ரமத்தில் இடைகழியில் படுத்துக் கொண்டிருந்தார். அங்குப் பூதத்தாரும் வந்து சேர்ந்தார். முறையான வரவேற்பும் வந்தனையும் நிகழ்ந்தன. பிறகு பொய்கையார் ''இங்கு ஒருவர் படுக்கலாம், இருவர் இருக்கலாம்' என்றார். அவ்வாறே இருவரும் இருந்தனர். அதாவது உட்கார்ந்தனர். பேயாழ்வாரும் அங்கு வந்து சேர்ந்தார். முறையான வரவேற்பு வணக்கங்களுக்குப் பின் பொய்கையாரும், பூதத்தாரும் ''இங்கு இருவர் இருக்கலாம்; மூவர் நிற்கலாம்'' என்றனர். அவ்வாறே மூவரும் அச்சிறு இடைகழியில் நின்றபடி பகவத்குணங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர்.

அப்போது, திருக்கோவிலூர்ப் பெருமானான திருவிக்கிரமன் பெருமழையினையும் காற்றையும் ஏற்படுத்தினான். அத்துடன் ஆழ்வார்கள் அறியாவண்ணம் தானும் இடைகழியில் புகுந்து நெருக்கமுண்டாகச் செய்தான். திடீரெனத் தோன்றிய நெருக்கத்தின் காரணத்தை ஞானத்தால் உணர்ந்த மூவரும் இறைவன் பெருமைகளைப் பாடத் தொடங்கினர்,

''வையந் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காச்—செய்ய
சுடராழி யானுக்கே சூட்டினேன் சொன்மாலை
இடராழி நீங்குகவே என்று''

எனப் பொய்கையார் முதற் திருவந்தாதி பாடினார்.

''அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியா-நன்புருகி
ஞானச் சுடர் விளக்கேற்றினேன் நாரணர்க்கு
ஞானத்தமிழ் புரிந்த நான்.''

என்று பூதத்தாழ்வார் இரண்டாந் திருவந்தாதி பாடினார். ஒருவர் சூரியனே விளக்கென்றார். அடுத்தவர் ஞானமே சுடர் என்றார். அப்போது தோன்றிய பெரு வெளிச்சத்தில் பெருமானின் திருக்கோலம் மூவருக்கும் புலப்பட்டது மகிழ்ச்சி பொங்க பேயாழ்வார்

''திருக்கண்டேன், பொன்மேனி கண்டேன்
திகழும்
அருக்கன் அணிநிறமும் கண்டேன்-செருக்
கிளரும்
பொன்னாழி கண்டேன், புரிசங்கம் கைக்கண்
டேன்.
என்னாழி வண்ணன்பால் இன்று''

என அவன் தோற்றத்தை வருணித்தார். பிறகு, மூவரும் திருமால் அருளியபடி வேறு பல திவ்ய தேசங்களுக்கும் (திருத்தலங்களுக்கும்) சென்று, பிரபந்தம் பாடி மீண்டும் திருக்கோவிலூர் வந்தனர். யோக நெறியால் நெடுங்காலம் வாழ்ந்திருந்து அவன் அருளின் வண்ணம் திருநாடு எழுந்தருளினார்கள்.

மற்ற ஆழ்வார்களுக்கு முன்தோன்றி வாழ்ந்து, அவர்களின், நெறிக்கே வித்திட்டதால் இம்மூவரையும் ''முதலாழ்வார்கள்'' என்று போற்றுகின்றனர்.

(தொடரும்)

# தெய்வச்

# சேக்கிழார் திருப்பதிகம்

தவத்திரு அண்ணாமலை அடிகள்

உலகமே போற்றும் உயர்தனிச் செந்தமிழ்
ஓங்கிடவும்
இலகும் அடியவர் தொண்டின் பெருமை
இசைத்திடவும்
அலகிலாப் பேரொளி அம்பலவன்சீர்
அருளிடவும்
புலமையில் மிக்க அருள்மொழித் தேவர்
புவியுறவே.

புவியிற் சிறந்த தொண்டை நாடு புகழுறவும்
கவிகளில் மிக்கநல் தெய்வக் கவிகள் கழறிடவும்
தவித்தலில் குன்றையூர் வேளாண் குடியோர்
தழைத்திடவும்
அவியாப் புகழ்ச்சேக் கிழார்தம் மரபில்
அவதரித்தார்.

அவமே மனிதக் கதைகேள் அநபாய
சோழமன்னன்
தவலாகும் என்றிடச் சேக்கிழார் தாங்கினர்
மந்திரியாய்
பவந்தீர் அடியவர் தெய்வச் சரிதம் பகர்ந்தருள
நவமுறத் தொண்டர் புராணம் நவின்றிட
வேண்டினனே.

வேண்டுவோர் வேண்டுவ ஈந்திடும் தில்லை
விமலனருள்
யாண்டுமே உண்டென் றுணர உலகெலாம்
ஓங்கொலியை
மாண்பெழச் செய்து தொடங்கிடச் சேக்கிழார்
மன்னிமனம்
ஆண்டதை ஆதியாய் வைத்துப் புராணமும்
ஆக்கினரே.

அநேகமாம் முத்தியே பெற்ற அருந்தொண்டர்
அற்புதங்கள்
மாக்கவி தைகளால் பாடிட மன்னன்
மனமுவந்தே
நோக்கரும் யானை எருத்தத் தமர்த்தியே
நூலுடனே
வாக்கினால்' தொண்டர்சீர் ஏத்துவார்'
என்றே வழுத்தினனே.

வழுத்தவே மக்கள் பெரிய புராணமிவ்
வையகத்தில்
பழுத்தநம் சைவப் புலவர்கள் பாடிப்
பரவசராய்
அழுத்தமாம் அன்பினில் தோய்ந்தே அடிமலர்
போற்றிடுவர்
தொழுமுத் தமசோழப் பல்லவ ராயரைத்
தோத்தரிப்போம்.

தரிக்குவர் சீலமும் நோன்பும் செறிவும்
தகுமறிவும்
முரிக்குவர் மும்மலம் முப்பொருள் எண்ணி
முனைப்புடனே
வரித்துப் பதிபசு பாச விளக்கமும்
வாய்த்திடுவர்
பரிந்திவ் வுலகில் பெரிய புராணம்படிப்பவரே.

படிப்போர் அறுபத்து மூவர் புராணம்
பலமுறையும்
நடித்திடும் அம்பல வாணன் அருளினை
நண்ணிநிற்கப்
படித்தலத் தன்பர் சிவமாய்க் கருதிப்
பணிவுடனே
அடியிணைக் கர்ச்சனை செய்து வரவேற்பர்
அன்புடனே.

அன்பிற்கு முண்டோ அடைக்குந்தாழ் என்ப
தறிந்திடலால்
அன்புற்ற கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை
யாரறியார்
அன்புற்ற சம்பந்தர் அப்பரும் ஆரூரர்
யாவருமே
அன்புற் றருஞ்செயல் ஆற்றிச் சிவமயம்
ஆயினரே.

ஆய்ந்திடின் தொண்டர் புராணத் தியல்பினை
அன்பறிவால்
வாய்ந்திடும் முத்தமிழ் மேன்மையும் மன்னர்
வழிமரபும்
ஏய்ந்திடும் அன்பர் சமரசப் பண்பா
டிலங்கிநிற்கும்
தாய்நிகர் சேக்கிழார் தாள்மலர் போற்றும்
தமிழுலகே!

திருச்சிற்றம்பலம்.

# ஆடல்



# காணீரோ...!

கம்பன் கவிநயமணி

**வே. தியாகராஜன்**

## (31)

வாதவூர் வருவதறிந்த பெருந்துறை நாயகனான இறைவன் வேதத்தினாலும் அளவிட முடியாத தன் கருணையால் குரு வடிவங்கொண்டு, தனது திருவடி நீங்காத சிவ அன்பர்களுடன் குருந்த மரத்தினடியில் வீற்றிருந்தார்.

நாட்டில் முதியோர் கல்வித் திட்டம் என வயது வந்தவருக்குக் கல்வி பயிற்றுவிக்க முயல்கின்றார்கள் அல்லவா! அதை முதன்முதலாக ஆரம்பித்து வைத்த பெருமை சிவபெருமானுக்கே ஆகும். இளம் வயதினன் குரு பீடத்தமர்ந்து வயது முதிர்ந்தோருக்கு உபதேசம் செய்த கோலம் முதியோர் கல்வித் திட்டத்தைக் காட்டுகின்றதன்றோ!

இனி இறைவனின் சின்முத்திரையை நோக்குவோம். ஆள்காட்டி விரல் வளைந்து கட்டைவிரலைத் தீண்ட, மற்றைய மூன்று விரல்களாக நடுவிரல், மோதிரவிரல், சுண்டு விரல் மூன்றும் தனித்து நிற்கின்றன. கட்டை விரல் கடவுள், ஆள்காட்டி விரல் ஆன்மா, ஆன்மா வளைந்து கடவுளைத் தீண்ட மூன்று மலங்களாய ஆணவம், கன்மம், மாயம் முதலானவற்றை நீக்க வேண்டும் என்பது மூன்று விரல்கள் தனித்து நிற்கும் தன்மை. நடுவிரலை ஆணவம் என்றார். எவர் கையிலும் நடுவிரல் நான் எவருக்கும் அடங்காதவன் என்பது போல நிமிர்ந்து நிற்கின்றது. நம்நாட்டில்நடு விரலுக்கு மோதிரம் போடக்கூடாது. அதைப் பாம்பு விரல் என அழைப்பர். ஆணவத்திற்கு எவராவது அலங்காரம் செய்வார்களா? வாதவூர் வள்ளலான, பாண்டியனின் மந்திரியார் சின்முத்திரை தரித்து தட்சிணாமூர்த்திக் கோலம் கொண்டிருக்கும் திருப்பெருந்துறை நோக்கி வருகிறார். அந்த இடம் நோக்கி அவர் வரும்போது, அவர் நெஞ்சு உருகுகின்றது. 'எனது ஆணவத்தை ஒழிக்கும் குருநாதன் இங்குள்ளார் போலும்' என்ற எண்ணத்துடன் அங்கு வருகிறார்.

'நெருப்பிலிடு வெண்ணெயென நெஞ்சுருக
என்னை
உருக்குமிதனால் எனை ஒளித்த மலவாற்றல்
கருக்குமவனாகி எனை ஆள் கருணைவெள்ளம்
இருக்குமிடனே இதென எண்ணி நகர் புக்கார்'

இறைவனைக் காணப்போகும் அடியவர்களுக்கு இம்மாதிரியான அனுபவங்கள் இயற்கையாகவே ஏற்படும் போலும்! திருப்பெருந்துறை ஆலயத்துள் நுழைந்து வலம் வந்த வாதவூரர் தட்சிணாமூர்த்தி கோலத்துடன் அமர்ந்துள்ள இறைவனைக் கண்டார். 'ஆனந்த நடனம் புரியும் கோலம் கண்ட இந்த ஏழைக்கு தட்சிணாமூர்த்தி கோலமும் காட்டி ஆட்கொண்ட கருணைதான் என்னே?'' என்று உருகிய வாதவூரர் இறைவன் மீது அன்பு எனும் வலையை வீசினார். இறைவன் அந்த அன்பு வலையில் அகப்பட்டுக் கொண்டார். 'பக்தி வலையிற் படுவோன் காண்க' என இந்த அனுபவத்தை இவரே வெளியிடப் போகிறாரன்றோ? உலகத்தில் வலைஞர் வீசும் வலைகளில் மீன்கள் அகப்பட்டுக் கொள்வதைக் கண்டிருக்கின்றோம். ஆனால் மீன் தன்னைப் பிடித்தவர் மீது பதிலுக்கு வலை வீசுவதைக் கண்டதில்லை. ஆனால் வாதவூராரின் அன்பு வலையில் அகப்பட்ட ஆண்டவன் என்னும் மீன், அவர் மீது அருள் என்ற வலையை வீச, வாதவூரர் அருள் வலையில் அகப்பட்டுக் கொண்டு, கவலை என்ற வலையிலிருந்து விடுதலையானார்.

'முன்பணிந்தனர் அணிந்தனர் அஞ்சலிமுடிமேல்
என்பு நெக்கிட உருகினர் இனியராய் எளிவந்து
அன்பெனும் வலைப்பட்டவர்அருள் வலைப்
பட்டார்
துன்ப வெம்பவ வலையறுத்திட வந்த
தொண்டர்'

அவ்வாறு இறைவனது அருட்கண் நோக்கம் பெற்ற அவரது திருநாவில் கலாதேவியான சரசுவதி குடிகொண்டாள். சிரமேற் கரம் குவித்துக் கண்களில் நீர் வார, உரோமங்கள் குத்திட்டு நிற்க, அனலில் இடப்பட்ட மெழுகு போல் உருகிய மனத்தோடு, தன்னையறியாது இறைவனது பெருமையைப் பாடலானார்.

'பழுதிலாத சொல் மணியினைப்பத்தி செய்து
அன்பு
முழுதுமாகிய வடத்தினால் முறை தொடுத்து
அலங்கல்
அழுது சாத்திடும் அன்பருக்கு அகமகிழ்ந்து
ஐயர்
வழுவிலாத பேர் 'மாணிக்க வாசக' என்றார்'


வாடும் மலர்மாலையைக் காட்டிலும் வாடாத பாமாலையில் இறைவனுக்கு ஏற்படும் மன நிறைவைக் காட்டுகிறது இச்செயல். பாட்டுக்கு மகிழ்ந்த பரமன் 'உன்னாலாக வேண்டிய வேலை இருப்பதால் இங்கிரு' எனக் கூறி, திடீரென மறைந்தார். இறைவனது பிரிவு தாங்காது வருந்திய மணிவாசகர் 'இறைவனே? வஞ்சகம் நிறைந்த இவ்வுடலை நெருப்பிலிட்டால் என்ன? நஞ்சு தடவிய வாளால் வெட்டினால் என்ன? இது உன்னுடைய சொத்து, எனவே இதை அழிக்க அஞ்சுகிறேன். தானாகவும் அழியமாட்டேன் என்கிறதே? என்ன செய்வேன்?' எனப் புரண்டு அழலானார்.

''வஞ்ச வினைக் கொள்கலனாம் உடலைத்
தீவாய் மடுக்கிலென்?
வரையு ருண்டு மாய்ப்பன் அல்லேன்?
நஞ்சொழுகு வாளாலும் குறைப்பேனல் லேன்?
நாதனே
அதுவும் நினது உடமையன்றே
அஞ்சினேன் தானேயும் அழியாது ஆவி! ஐயனே
நினைப்பிரிந்தும் ஆற்றகில்லேன்
என்செய்கோ? எந்தாயோ எந்தாயோ
என்றிரங்கினார்
புரண்டழுதார், இனைய சொல்வார்''

ஏழையான பிறவிக்குருடன் கையில் கிடைத்த பெருவிலைமணி போல் ஞானக் கண்ணில்லாத ஒன்றுமறியாத ஏழையான என்னிடம் வந்தாய். குழந்தையின் கையில் கிடைத்த பொற் பாத்திரத்தின் பெருமையைக் குழந்தை அறியுமோ! எனை வலிய வந்தாட் கொண்ட அருமை அறியாது போனேனே என்றெல்லாம் புலம்பி வருந்திய மாணிக்க வாசகர் மனம்தேறி தன் கூட வந்த அன்பரிடம் ''ஆடி மாதம் குதிரைகள் வரும் எனப் பாண்டியனிடம் போய்த் தெரிவியுங்கள்'' என அவர்களை மதுரைக்கு அனுப்பினார். அவர்களை அனுப்பிய பின்னர் குதிரை வாங்கக் கொண்டு வந்த பொருளையெல்லாம் இறைவன் திருப்பணிக்குச் செலவிடலானார்.

ஆடிமாதம் வந்தது. குதிரைகள் வாங்கப் பட்டனவா எனப் பாண்டியன் எழுதிய ஓலையுடன் தூதுவர் திருப்பெருந்துறைக்கு வந்து ஓலையை மாணிக்கவாசகரிடம் தந்தனர்.

ஓலையைக் கண்டு திகைத்த மாணிக்க வாசகர் சிறிது நேரம் யோசித்து 'எவருக்காகப் பொருளைச் சிலவிட்டோமோ அவரிடமே போய் கேட்போம்' என எண்ணிக் கோயிலை அடைந்து 'இறைவனே பாண்டியனது பொருளையெல்லாம் உனக்கும் உன் அடியாருக்கும் செலவு செய்ய அருள் பாலித்தாய், குதிரைகளை எவ்வாறு பாண்டியனுக்குக் கொண்டுபோய்க் கொடுப்பேன்!' எனக் கேட்டனர்.



''என்னாயகனே? பொன்னாம் ஏறே? ஏறு
கொடியுயர்த்த
மன்னா தென்னா பெருந்துறை எம்மணியே
வழுதி பொருளெல்லாம்
நின்னாலயத்தும்நின் அடியாரிடத்தும்
செலுத்தும் நெறியளித்தாய்
பின் நான் அவனுக்கு என் கொண்டு பரிமாச்
செலுத்துமாறே''

எனத் தொழுதேத்திய காலத்து 'அரசனுக்குக் குதிரைகள் வந்து சேருமென ஓலையனுப்புக' என அசரீரி கேட்டது. அது கேட்டு மகிழ்ச்சி கொண்ட வாதவூரார் அவ்வாறே ஓலை அனுப்பிவிட்டு, அன்றிரவு துயிலும்போது கனவில் இறைவன் தோன்றி' ''நல்ல குதிரைகளுடன் நாமே மதுரை வருகிறோம். இன்று முன்னாள் மதுரைக்கு நீ செல்லுக'' என உத்தர விட்டனர். மட்டிலா மகிழ்ச்சி கொண்ட மணிவாசகர் மதுரை வந்தடைந்தபோது மன்னவன் 'எவ்வளவு பொருள் கொண்டு போனீர்கள்? எவ்வளவு குதிரைகள் 'வாங்கினீர்கள்!' எனக்கேட்க ''கொண்டுபோன பொருளுக்கும் அளவில்லை., வரும் குதிரைகளுக்கும் அளவு தெரியாது'' எனப் பொதுவாகப் பதில் கூறினர் அரசனிடம். விடைபெற்ற மணிவாசகர் ஆலவாயப்பனின் கோயிலையடைந்து

''மதுரை நாயகனே! குதிரைகள் எப்போது வரும்!'' எனக் கேட்க 'பயப்படாதே' மிக நல்ல குதிரைகளுடன் வந்து சேருகிறோம்' என அசரீரி கூறக்கேட்டு, மகிழ்ச்சி யடைந்து தன் வீடு சென்றனர். வீட்டில் அவரது உறவினரும் மற்றெல்லோரும் கூடி அவருக்கு நற்புத்தி கூற லாயினர். 'பிராமணன் மந்திரியாக வரக் கூடாது என்பது ஆன்றோர் வாக்கு. சத்திய நிலை நீங்கி அரசனுக்கேற்றவாறு பேசுவது அந்தணருக்கு அழகல்ல. அரசாங்கத்திற்காக நீதி நூல்களையெல்லாம் படித்த உங்களுக்கு நாங்கள் என்ன புத்தி சொல்வது! நீர் செய்வது ஒன்றும் நன்றாயில்லை. அரசனிடம் இன்று குதிரை வரும் என்று கூறினீர், பொழுது விடியப்போகிறது நாளை என்ன சொல்லப் போகிறீர்!' என்றெல்லாம் பேசலாயினர்.

தனக்குப் புத்திக் கூறியவர்களை நோக்கி 'பெருந்துறை நாயகன் அருள் செய்த அன்றே என் உற்றார் உறவினரைத் துறந்தேன். இன்ப துன்பங்களை மறந்தேன். உடலின் மீதுள்ள ஆசையை நீக்கினேன். செல்வத்தை வெறுத் தேன். கோபத்தையும் கர்வத்தையும் விட்டு விட்டேன். இனி எனக்குத் தாய் தந்தை குரு எல்லாம் சிவபெருமானே, ஆசையற்ற தன் மையே மனைவி. உலகத்திலுள்ள உயிர் களெல்லாம் என் மக்கள். ஈசனடியார்களே சுற்றத்தார்கள். இறந்தாலும் சரி, இருந்தாலும் சரி, அரசன் கோபித்தாலும் சரி, திருப்தி யடைந்தாலும் சரி, நரகம் சேர்ந்தாலும் சரி சுவர்க்கம் புகுந்தாலும் சரி, சிவபெருமானை மறக்க மாட்டேன். விதியின் விளையாட்டை யார் தடுக்க முடியும்!' என மாணிக்க வாசகர் பதில் கூறினார். குதிரைகள் வராதது பற்றி அரசன் அவரைக் கேட்க, 'மூன்று தினங்கள் கழித்துக் குதிரைகள் வரும்' என்றனர். மூன்று தினங்கள் கழிந்தன. அரசன் கோபித்து, 'இவர் குதிரை எங்கு வாங்கினார். அவைகள் எப்போது வரப் போகின்றன. இவரைக் கொண்டு போய் தண்டனை செய்து நம் பொருள்களைத் திருப்பி வாங்குகள்' எனக் கட்டளையிட, அரசனின் ஏவலாளர் 'பணத் திற்கு என்ன சொல்லுகிறார்' என அவரைச் சீறி, அவரது தலைமேல் கல்லை வைத்தனர். திரிபுரத்தை எரித்த சிவபெருமானது, திரு வடிகளை வணங்கி நின்ற மாணிக்க வாசகரின் துயரம் நீங்கும் வண்ணம் சிவபெருமான் அவரது பாரத்தைச் சுமந்தார்.

''பொன்னெடுஞ் சயிலங் கோட்டிப்புரம்
பொடிபடுத்த வீரர்
சொன்னொடுந்தாளை உள்கி நின்றனர் சுமந்த
பாரம்
அந்நெடுந்தகையார் தாங்கி ஆற்றினார்
அடைந்த அன்பர்
தன்னெடும் பாரமெல்லாம் தாங்குவார்
அவரேயன்றோ''

மாணிக்க வாசகரின் பாரத்தை இறைவன் தாங்கி காத்தது 'நம்பினோர் கெடுவதில்லை இது நான்மறையின் தீர்ப்பு' என்ற பாரதியின் வாக்கையும் 'என்னை நம்புவோரின் சுக துக்கங்களை நான் ஏற்கின்றேன்' எனக் கீதை யில் கண்ணன் கூறியதையும் நினைவுறுத்து கின்றதன்றோ!

கல்லின்பாரம் தெரியாது நின்ற அப் பெருமகனாரின் கை கால்களில் கிட்டியடித்துத் துன்புறுத்தினர். மாலை கழிந்து இரவு வந்த தும் விலங்கு மாட்டிச் சிறையில் இட்டனர். விடிந்ததும் கோயிலில் திருப்பள்ளி எழுச்சி நடைபெறும். மங்களகரமான வாத்திய ஓசை கேட்டு தான் அழகிய அக்காட்சியைக் காண முடியவில்லையே என ஏக்கக் கொண்டு கண்ணீர் விட்டுக் கதறலானார்.

''எந்தாய்-உலகனைத்தும் ஈன்றாய்
எத்தேவர்க்கும்
தந்தாய்! செழுங்குவளைத்தாராய்,
பெருந்துறையில்
வந்தாய்! மதுரைத் திருவாலவாய் உறையும்
சிந்தாமணியே! சிறியேற்கு இரங்காயே!''

எங்கும் கண்ணுள்ள நீ என்னைக் கண்டு காக்க வேண்டாமா? எங்கும் காதுள்ள நீ என் குறைகேட்டு இரங்க வேண்டாமா? என அலறி னார்.

அருணகிரியார் 'உன்னைத் துணை கொண்டும் வாழும் என்னைக் காப்பது உன் கடமை. உனக்கும் கௌரவம்'

''களிகூறும் உனைத்துணைதேடும்
அடியேனை சுகப் படவே வை
கடனாகும் இதுக்கனமாகும்-முருகோனே''

என்றார். குமரகுருபரசுவாமிகள் 'இறைவனே! உன்னை வணங்கும் எனக்குப் பக்குவமில்லை என எண்ணமாட்டார்கள். என்னைக் காக்க உனக்கு சக்தியுண்டு எனக்கூறும் வேதமும் பொய் கூறுமோ என அஞ்சுவரே' என்கிறார்.

''பரிபாக மின்மை நோக்கார்; கோலத்
திருநடம் கும்பிட்டு ஒருவன் உய்ந்திலனால்
சுருதியும் உண்மை சொல்லா கொல்? என
வறிதே அஞ்சுவர்? அஞ்சாது
சிறியேற் கருளுதி செல்கதி செலவே''

அதுபோல மாணிக்க வாசகர் 'இறைவனே உன்னை நினைந்து வணங்கிய என்னைக் காக்க வாராதிருந்தால் ஊரார் உன்னைச் சிரிப் பாரே என வருந்துகிறேன். அரசனது ஆட்கள் செய்யும் கொடுமையைப் பார்க்க மாட்டாயா?'

ஊரார் உன்னைச் சிரிப்பதோராய்!

என்றுன்னடிமைக்

காராயடியேன் அயர்வேன்; அஃதறிந்தும்

வாராய் அரசன் தமரிழைக்கும் வன்

கண்ணோய்

பாராய் உன் தன்மை இதுவோ பரமேட்டீ''

எனக் கதறினார். கன்று அழைத்ததும் தாய் உருகுவது போல் இறைவன் மாணிக்கவாசகருக்கு அருள் பாலிக்க வேண்டுமென்று திருவுள்ளங்கொண்டு, நந்தி முதலானவர்களை அழைத்து 'காட்டிலுள்ள நரிகளை எல்லாம் குதிரைகளாக மாற்றி, நீங்களெல்லாம் குதிரை சேவகர்களாகப் புறப்படுங்கள். நாமும் தக்க சமயத்தில் தக்கபடி வருவோம்' என்றார்.

இறைவன் சுருதி என்னும் குதிரையில் ஏறினார். அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு கால்களையும், ஞானகாண்டம், கர்மகாண்டம் ஆகிய காதுகளையும் பரஞானம், அபரஞானம் ஆகிய கண்களையும், விதி எனும் முகத்தையும், விலக்கு எனும் வாலுங் கூடிய குதிரையேறி வந்தார் சிவபெருமான்.

பெரிய குதிரைக் கூட்டம் மதுரைநோக்கி வருகிறது. முதல் குதிரையில் வரும் பெருமானைக் கண்ட நாட்டு மக்கள்'.இவன் யார்! மன்மதனோ! முருகனோ! திருமாலோ தேவேந்திரனோ!

''காமனிவனே கொல்? அதுகாலுழு கடபப்ந்

தாமனிவனே கொல்? பொருதாரகனை

வென்றோன்

மாமனிவனே கொல்? மலைவன் சிறகரிந்த

நாமனிவனே கொல்என நாரியர் அயிர்த்தார்''

குதிரைகள் வருவது கண்டு, ஏவலாளர் அரசனிடம் வந்து செய்தி கூற, மட்டிலா மகிழ்ச்சி கொண்ட அரசன் அரண்மனை வாசலில் வந்து குதிரைகளைக் காணலானான்.

தங்கத்தைப் பொற்கொல்லன் நெருப்பிலிட்டுக் காய்ச்சுகிறான். மீண்டும் தட்டுகிறான். அவ்வாறு காய்ச்சித் தட்டத் தட்ட அது தூய்மை பெறுகிறது. அதுபோல இறைவன் நம்மைத் துன்பமென்னும் நெருப்பிலிட்டுக் காய்ச்சி எடுத்துப் பரிசுத்தப் படுத்துகிறான். மாணிக்கவாசகருக்கு அருள் புரியக் குதிரைச் சேவகனாக வந்த இறைவன், யாதோ காரணத்தால், அவரைச் சோதிக்கத் திருவுளம் கொண்டான் போலும்! குதிரைகள் வேறு திசையில் சென்றன. குதிரைகள் வருவது தாமதமாகவே பாண்டியன் தான் ஏமாந்து விட்டதாக எண்ணிக்கோபமடைந்து மாணிக்கவாசகரைத் துன்புறுத்தினான்.

''பரனருள் விளையாட்டால் காட்டிய

பரிவெள்ளம்

வருவன சிறுகாலம் தாழ்த்தலும் மதிவேந்தன்

புரவலன் மனம் வெள்கிப் பொய்யிது எனவுள்கி

அருகணை உழையோரைக் குறித்தனன் அழல்

கண்ணான்''.

அரசனது கட்டளையின் பேரில் ஏவலாளர்கள் மாணிக்க வாசகரைத் துன்புறுத்தினர். 'பிரம தேவனுக்கும் கிடைக்காத ஞானத்தையருளிய பெருமானே! எனது பாடல்களாகிய பாமாலைகளை ஏற்றுக் கொண்டீரே! தேவ தேவ! என் துன்பத்தைக்கண்டு இரங்க வேண்டாமா? எனது மனம், வாக்கு, காயம் எல்லாம் தங்களது என்றது பொய்யா! அஞ்சாதே எனக் காக்க வேண்டாமா!'..

''நெஞ்சே உரையே செயலே எல்லாம்

நினதென்றாய்

வஞ்சே போலும்? அஃதேல் இன்றுவாராயோ?

பஞ்சேரடியாள் பாகா? கூடல் பரமேட்டீ?

அஞ்சேல் என்னாய் இதுவோ? அருளுக்கு

அழகையா?''

'பஞ்சேரடியாள் பாகா' அம்மையப்பா! மீனாட்சி நாயகா என அழைத்த பின்னரே இறைவன் வந்தார் என்பது குறிப்பு.

மாணிக்க வாசகரின் அழைப்புக் கேட்டதும் இறைவன் குதிரைக் கூட்டங்களுடன் பாண்டியன் எதிரில் தோன்றினார். சுட்டிக் காட்ட முடியாத இறைவனை சோதி எனக் கூறுகிறார் கவிஞர். சுட்டிக் காட்ட முடியாத இறைவனைப் பாண்டியன் காணும்பேறு பெற்றான் என்பது பொருள். வேதமாகிய குதிரையின் மேல் ஏறிவந்த இறைவனைக் கண்ட பாண்டியன் தான், ஒரு அரசன் என்பதை மறந்து குதிரைச் சேவகன் வேடத்தில் வந்தவனைக் கண்டு, எழுந்து சிரமேற் கரங்குவித்து வணங்கி நின்றான்.

''சுட்டுதற்கரிய சோதி சுருதிவாம் புரவியோடு

மட்டவிழ் தாரினான் முன்வருதலும் கருணை

நாட்டம்

பட்டுளம் மயங்கித் தன்னைமறந்தொழி

இப்பாண்டி வேந்தன்

தட்டவிழ் கமலச் செங்கைத் தலை மிசைக்

கூப்பி நின்றான்''.

(தொடரும்)

# கண்ணன்

# திருமேனி அழகு



திருக்குடந்தை


**சௌரிராஜ திருவேங்கடத்தான்**

இறைவன் திருமாலுக்கு ஐந்து நிலைகள். அந்த நிலைகளில் திருக்கோயில்களில் அவன் உகந்து அருளும் நிலையை, அர்ச்சை எனப் போற்றுவோம். அப்படி அந்த பரமன் எழுந்தருளியிருக்கும் உகந்தருளிய நிலங்களிலே, திருவரங்கம் முதன்மை பெற்றது என ஆன்றோர்கள் பணிப்பர். ஆழ்வார்களில் திருப்பாணாழ்வார் அந்த எம்பெருமானுடைய (அரங்கன்) அழகை, தாம் அருளிய அமலனாதிபிரான் என்ற திவ்ய பிரபந்தத்தில் பத்துப் பாசுரங்களாலே பாதாதிகேசம் அனுபவித்து, உலகம் உய்ய வெளியிட்டருளினார்.

பகவானின் மற்றொருநிலை (ஐந்து நிலைகளில்) விபவம் என்பதாம். அதாவது; நல்லவர்களை காக்க, தீயவர்களை அழிக்க தர்மத்தை நிலைநாட்ட, அப்பரம்பொருள் எடுக்கும் அவதாரம் ஆகும். பரமனுடைய அவதாரங்கள் எண்ணிறந்தவை. அவைகளிலே தசாவதாரத்திற்கு தனிச்சிறப்பு உண்டு. தசாவதாரத்திலே ஆழ்வார்கள் மிகவும் ஈடுபட்டது கண்ணனுடைய அவதாரம். அதை ஆசாரியப் பெரியோர்கள் பூர்ணமான அவதாரம் என்று கொண்டாடிப் பேசுகிறார்கள், ஆழ்வார்களில் பெரியாழ்வார் ஸ்ரீகிருஷ்ண அவதாரத்தில், ஈடுபட்டு யசோதை பாவனையில், பாலலீலைகளை ஒன்று விடாமல் அனுபவித்து உள்ளார். தாம் பாடிய திருமொழியில், முதலில் 'வண்ண மாடங்கள் சூழ்திருக்கோட்டியூர் கண்ணன் கேசவன் நம்பி'' என ஆரம்பித்து அவன் அவதாரச் சிறப்பை ஒரு திருப்பத்திலே அருளிச் செய்கிறார். அடுத்து, 20 பாசுரங்களிலே அக்கண்ணனின் திருமேனி அழகை முழுவதுமாக, திருப்பாதம் முதல் திருமுடி வரை ஒவ்வொரு அங்கமாக வர்ணிக்கிறார். தாம் அனுபவித்து திருப்தி அமையாமல், நம் எல்லோரையும் அந்த அழ்கைப் பாருங்கள் என ஒவ்வொருபாசுரமுடிவிலும் ''வந்து காணீரோ? வந்து காணீரோ?'' என யசோதையாக மாறி பட்டர்பிரான் அனைவரையும் அழைக்கிறார். அழகின் எல்லை நிலமான கண்ணனின் திருமேனி சௌந்தர்யத்தைச் சாரமாக நாமும் சுவைப்போம். ஒவ்வொரு ஐந்து பாசுரங்களிலும் எப்படி ஈடுபட்டார் எனக்கண்டு, அதில் சொல்லப்படும் நயவிசேஷங்களையும் சுருக்கமாக பார்ப்போம்.

''சீதக் கடல்'' என ஆரம்பித்து 'பிறங்கிய பேய்ச்சி'' எனத் தொடங்கும் முதல் ஐந்து பாசுரங்களிலே அவன் பாதங்களை-பாதத்தில் உள்ள விரல்களை, கணைக்கால், முழந்தாள்கள், திருத்தொடைகள் ஆகிய அவயவங்களின் அழகில் தன்னைஅர்ப்பணித்துக்கொள்கிறார். ஸாரமான நயங்கள்; தேனே மலரும் திருப்பாதவிரல்களைக் கண்ணன் தன் திருவாயில் வைத்து சுவைக்கும் காட்சியைக் கண்டு மகிழ்கிறார். பத்து விரல்களிலும், நவரத்தினங்களின் வர்ணங்களை ஒன்பது விரல்களிலும், பத்தாவது விரலுக்குப் பொன் நிறத்தையும் இட்டு. அந்த அற்புதமானநிறங்களின் நேர்த்தி அழகை பாருங்கள் என்கிறார். தவழும்போது அவன்முழந்தாள்களின் அழகே தனி, நரசிம்மாவதாரத்தில், இரணியனை தன் திருத்தொடைகள் மீது வைத்துக் கொண்டு பிளந்தபடியால், அச்சுவடுகள் இப்போதும் தோற்றும்படியிருக்கும் கண்ணனுடைய திருத்துடைகள் அழகை காண நம்மை அழைக்கிறார்.

'மதக்களிற்று' என ஆறாவது பாசுரம் தொடங்கி 'பெருமாவுரலில்' என்ற பத்தாவது பாசுரம் வரையில் கண்ணனின் முத்துப்பவளவடங்களோடு சேர்ந்த அரைநாண் திகழும்படியான இடுப்பு, அழகிய நாபி, தாயால் கட்டப்பட்ட அத்தாம்பின் தழும்போடு கூடிய வயிறு, கௌஸ்துப, வைஜயந்தி முதலிய ஆரங்கள் அசைந்தாட அழகுற விளங்கும் திருமார்பினுடைய அழகில் ஈடுபடுகிறார். ரஸமான கருத்துக்கள்; கண்ணன்பிறந்த திருநட்சத்திரம்



ரோகிணி, கண்ணனாக திருவவதாரம் செய்த திருமாலின் திருநட்சத்திரம் திருவோணம், கண்ணன் பிறந்த நட்சத்திரமான, ரோகிணியையும் சொல்லாமல், திருமாலின் நட்சத்திரமான திருவோணத்தையும் 'அத்தத்தின் பத்தாநாள் தோன்றிய அச்சுதன்' என (அஸ்தத்தின் பின்னே பத்தாவது திருநாள் திருவோணம்) மறைத்துச் சொல்கிறார். காரணம் நேராக அவன் பிறந்த ரோகிணித்திருநாளைச் சொன்னால், யாராவது விரோதிகள் (பிரேமத்தால் அஞ்சி) கெடுதல் செய்துவிடுவார்களோ என நினைத்து உண்மை திருநட்சத்திரத்தைச் சொல்லாமல் குறிப்பால் அருளுகிறார். கண்ணனுடைய பொல்லாத, தீராத, அடங்காத விளையாட்டுத் தன்மையை குறிக்கும் வகையில் ''அதிரும் கடல்நிற வண்ணனை'' என்கிறார்.

அடுத்து 'நாள்களோர் நாலைந்து' என்ற பதினொன்றாம் பாசுரத்திலிருந்து 'நோக்கிய யசோதை நுணிக்கிய மஞ்சலாள்' என்ற பதினைந்தாம் பாசுரங்கள் வரையில் கண்ணனுடைய தோள்கள், கைகள், பிரளய காலத்தில் அனைத்தையும் விழுங்கிய கழுத்து, சிவந்த உதடுகளை உடைய வாய், திருமுகம் இவைகளின் அழகைக் காண நம்மை அழைக்கிறார், சிந்தித்து மகிழவேண்டிய நயங்கள்; கண்ணன் முதலில் பூதனையை முடித்து, பின்பு சகடாசுரனை அழித்தாள், அப்படியிருக்க, அச்சிறுகுழந்தையினுடைய மாயச் செயல்களில் ஈடுபட்டு வர்ணிக்க முயலும்போது, மகிழ்ச்சியின் மிகுதியால் எதுமுன்னது, எது பின்னது என்பதை மறந்து 'தாளை நிமிர்த்து சகடத்தைச் சாடிபோய் வாள் கொள்வளையெயிற்று ஆருயிர் வவ்வினான்' என நடந்தசெயல்களை மாற்றிச் சொல்கிறார். கண்ணனைப் பிறரிடம் கொடுக்காமல், தானே அவளை கண்ணும் கருத்துமாக் வளர்த்ததால், யசோதையின்கண்களின் கருமை நிறம், கண்ணனின் திருமேனியில் ஏறி, அப்படி கார்முகில் போல் பிரகாசிக்கிறதாம். கண்ணனுடைய திருக்கண்கள், திருவாய், புன்சிரிப்பு, அழகிய மூக்கு இவைகளுடன் கூடிய திருமுகத்தின் அழகு எல்லோரையும் வா வா என அழைக்கின்றதாம். கடைசி ஐந்து பாசுரங்களில், அதாவது 'விண்கொள் அமரர்கள் வேதனை தீர'' என பதினாறாவது பாசுரம் தொடங்கி, 'அழகிய பைம்பொன்னில் கோல்' என்று இருபதாவது பாசு

ரங்கள்வரை கண்ணனுடைய திருக்கண்களைத் தனிப்பட்ட முறையில் அனுபவித்து பிறகு அழகிய புருவம், காதில் அணிந்து கொண்டிருக்கும் மகரகுண்டலங்கள், திருநெற்றியின் அழகு, கடைசியாக, அவனுடைய சுருண்ட கேசங்களின் அழகையும் காணும்படி நம்மை அழைக்கிறார். நம்மை ஈர்க்கும் கருத்துக்கள்: 'விண்கொள் அமரர்கள் வேதனை தீர' என பதினோராவது பாசுரத்தை ஆரம்பித்து, மூன்றாவது அடியில் 'திண்கொள் அசுரரைத் தேய' என பகவத் கீதையில் அவதாரம் பிரயோஜனங்களைதாம் அருளியபடி, முதலில் வசுதேவர் மகனாய் பிறந்து, அவருடைய துயரைப் போக்கினான்: பின்னர் அசுரர்களை அழித்து, தேவர்கள் துயரைத் தீர்த்தான். ஆக நல்லோரைக் காப்பதும், தீயோர்களை அழிப்பதும் அவன் விரதம். அதை நிறைவேற்ற அவதரித்த கண்ணனுடைய கண்களிலே உள்ள ஈடில்லா ஒளியைக்காண முடிகிறது என்கிறார். ஸ்ரீராமன் பருவம் நிரம்பிய பின்பு, தீய அரக்கர்களைத் தொலைக்க முற்பட்டான். ஆனால் கண்ணனோ, தொட்டிற் பருவம் தொடங்கியே, பூதனை, சகடாசுரன் முதலியவர்களை மாய்த்தான். அப்படி பருவம் நிரம்பாமல் இருக்கும் போதே அச் செயல்களைச் செய்தான். அக்கண்ணனை தேவகி நோற்றுப் பெற்றாள். 'திருவின் வடிவொக்கும் தேவகி பெற்ற உருவகரிய ஒளி மணிவண்ணன்' என அருளுகிறார். உலகங்களை மகாப்பிரளய காலத்தில் உண்டு வயிற்றில்வைத்துக்கொண்டு பிறகு உமிழ்ந்தவன் திருமால். அப்படி காப்பாற்றிய அந்தமகிழ்ச்சியுடன், மகர குண்டலங்களை அணிந்திருக்கும் அழகை அனுபவியுங்கள் என்கிறார். சிறு பெண்கள், மணலைக்கொண்டு விளையாட, சிறுமுறம் சிறுபானை முதலிய பொருட்களை வைத்துக்கொண்டிருப்பார்களாம். அவைகளைப்பலாத்காரமாக பறித்துக்கொண்டு பிடிபடாமல், கண்ணன் ஓடிவிடுவானாம். அந்தக் களைப்பால், வியர்வை நெற்றியில் விழுமாம். அந்த திருநெற்றியின் அழகை வந்து பாருங்கள் எனஅழைக்கிறார் யசோதை. ஊர்ப்பெண்களை அழைத்து, கண்ணனுடைய பாதாதி கேசம் அழகை வர்ணித்து அவர்களிடம் காண்பிப்பாளாம். அதைத்தான் தானும் பேசினேன் என்று பெரியாழ்வார் அருளுகிறார் இப்பாசுரங்கள் மூலம் கண்ணன் அழகை பருகுபவர். ஸ்ரீவைகுண்டம் அடைந்து அங்கும் பரமனைப், பாதாதி கேசம் அனுபவித்து,இன்புறுவார்கள் என முடிக்கிறார். (அதாவது பேறு பெறுவார்கள்). ஆக, பெரியாழ்வார்யசோதையின் பாவனையில் அனுபவித்தகண்ணனின் நிகரில்லா அழகை, அவர் அருளிய பாசுரங்கள் மூலம் அனுபவித்துக் கண்ணன் திருவருளைப் பெறுவோம்.

## விழித்துக் கொள்ளுங்கள்



எழுந்திருங்கள்,

விழித்துக் கொள்ளுங்கள்,

இனியும் தூங்க வேண்டாம்.

எல்லாத் தேவைகளையும்,

எல்லாத் துன்பங்களையும்

நீக்குவதற்கான பேராற்றல்

உங்கள்

ஒவ்வொருவருக்குள்ளேயும்

இருக்கிறது.

—சுவாமி விவேகானந்தர்.

# வினையிருள் அகல

## வ. ராமதாஸ் ஐ.ஏ.எஸ்

எத்தனைதான் துருவித்துருவி ஜாதகம், நாடி இவைகளைப் பார்த்தாலும் பிழை நேரிடும். ஏதோ உட்சாந்திக்காக, மனசாந்திக்காக இவைகளைப் பார்க்கலாமே தவிர மனித அறிவைக் கொண்டு முற்றிலும் சரியாக எதையும் கூறவே முடியாது. அனைத்துமே ஈஸ்வரன் திருவடித் திருவருள் பிடியில் அமைந்துள்ளதால், அப்படி அமைந்தபடியே நடப்பதால் ஈஸ்வரப் பிரார்த்தனையே நன்மை கொடுப்பதாக அமையும். அதே நேரத்தில் செய்யும் பிரார்த்தனை-பூசைகளுக்கு பலன் உண்டு. சில பல நாம் உணர்ந்து கொள்ளும்படியாகவும், சில நாம் உணர முடியாமலும் அமையும், சில சமயங்களில் பலனே இல்லாமல் போகும். சிலவற்றில் எதிர்பலனாகவும் அமையும். குளிக்கப் போய் சேற்றைப் பூசிக் கொண்டது போல். அனைத்துமே சித்த சுத்தி-காரியசுத்தி-பொருள் சுத்தி இவற்றைப் பொருத்து அமையும். ஆகவே பூசைகளில் சாஸ்திர சம்பிரதாயங்களில் நம்பிக்கை வேண்டும். தெய்வங்கள் மற்றும் மகான்கள்கூட மனிதராக பூமியில் அவதாரம் எடுக்கும்போது செய்யும் காரியங்களுக்கு ஏற்ப பலாபலன்களை அனுபவிக்க வேண்டும் என்று ஒரு நியதி உண்டு. தன் பக்தர்களுக்கு விமோசனம் தந்துவிட்டு, தான் செய்த கர்மா பலனையும் அனுபவிக்கும் பொருட்டு, சாதாரண மனிதனாக வாழ்ந்து வரும். எந்த ஒரு அவதாரமும், காரண காரியங்களை முன்னிட்டே நடப்பதுதான். அவதார புருஷர்கள் மிக விரைவில் தங்களைப் புரிந்து கொண்டு (ஞானம் பெற்று) விரைவிலேயே தங்களின் மூலக் கர்த்தாவிடம்போய்ச் சேர்ந்து விடுவார்கள். அதற்கு தெய்வங்களும் மகான்களும் நேரடியாகவும் மறைமுகமாகவும் உதவி செய்வார்கள். 'வலிய வந்து ஆட்கொண்டு' குருவாக வந்து அவதார நோக்கத்தைப் பூர்த்தி செய்வார்கள்.

"ஆகாமியக் கர்மா' என்பது புதிய கர்மா. கர்மாவின் உற்பத்தி ஒரு காரியம் செய்யும் போது உண்டாவது. ( Automatic and Simultaneous) கண்களால் செய்யும் பணி, காதினால் செய்யும் பணி, மூக்கால் செய்யும் பணி, வாயால், நாக்கால், உடலால் செய்யும் பணி இவைகளும் மனதினால் செய்யும் பணியும் விளைவுகளை ஏற்படுத்துகிறது. ஒவ்வொரு உறுப்பினால் செய்யப்படும் செயல், செயலின் தன்மையைப் பொறுத்து அவ்வுறுப்புக்கு நன்மை தீமைகளை உண்டாக்குவதுடன் மற்ற உறுப்புகளுக்கும் விளைவுகளைப் பங்கிட்டுக் கொடுக்கும். செயலின் விளைவு செயலின் தன்மையைப் பொறுத்து ஒன்றுக்கொன்று பின்னி விடுவதால் சகல அங்கங்களையும் கட்டுப்படுத்தும். மனதை நிச்சயமாகக் கட்டுப்படுத்தி நன்மை கொடுக்கும்படியான செயல்களை மட்டும் செய்ய வேண்டும். ஒரு கடுமையான நிர்ப்பந்தத்தில் செய்யும் காரியம்என்றாலும் விதி விலக்கின்றி ஆகாமியக் கர்மா உருவாகிநின்று நிலைத்து உருத்துவந்து பிராரப்த கர்மாவாகி பலன் கொடுக்கும்.

கொடுத்ததை சரியாகப் பயன்படுத்தவில்லை என்றால் கொடுத்தது பறிக்கப்படும் என்று குருமார்கள் சொல்கிறார்கள். இறைவன் கொடுத்த சக்திகளைச் சரியாகப் பயன்படுத்த வேண்டும். நினைக்கும் சக்தி, பார்க்கும் சக்தி, பேசும் சக்தி, கேட்கும் சக்தி, அறிவின் சக்தி, ஞான சக்தி, ஞாபக சக்தி, கிரியா சக்தி, இச்சா சக்தி போன்ற பல மனித வாழ்வுக்குபோதுமான சக்திகளைக் கொண்டது ஆத்ம சக்தி. இந்த ஆத்ம சக்தியுடன் முன் ஜென்மங்களின் கர்ம சக்திகள் இரண்டறக் கலந்து பிரிக்கவே முடியாதபடி கட்டி வைக்கப் படுகிறது. இப்பிணைப்பை, அதிரகசியமான மாயா சக்தியினால் மறைக்கப்படுகிறது.... 'மாயை' என்ற மகாசக்தியினால் மயங்கியுள்ள ஒருவன் தான் 'மாயா' சக்திக்குள் இருக்கிறோம் என்ற உண்மையை உணருவதற்குள் பல ஜன்மங்கள் முடிந்துவிடும். இதைத்தான் ஔவையார் 'மாயாப் பிறவி' மயக்கம் அறுத்து' உலக வாழ்வில் தான் செய்வதில் நல்லது எது கெட்ட.து எது என்று ஒருவன் உணர்ந்து கொள்ளும் சக்தி (COMMON SENSE) யை எல்லோருக்கும் வைக்கப்பட்டுள்ளது. இச்சக்தி 'தன்னிச்சையான' சக்தி. இது காலம் வரும் போது விட்டகுறை தொட்ட குறை கூடிவரும் போது மாயா சக்தியில் அகப்பட்டுள்ள கர்மா தன் பணியை தவறாமல் செய்யும், மாயா சக்தியின் தன்மையினால் மனிதன் அனைத்துக் காரியங்களையும் 'தான்' செய்வதாகவே நினைக்கிறான். கர்ம பாரம் குறையக்குறைய மன மாயையின் தன்மையும் தானாகவே மறையும். ஒரு எடை போடும் ராத்தலில் பாரம் குறையக் குறைய ராத்தலின் ஸ்பிரிங்கு உள்ளே

சொருகிக் கொள்வதைப் போல, கர்ம பாரமே இல்லாதபோது, மாயை முழுவதும் மறைந்து மற்றொன்று தோன்றும். அதுவேதான்'என்பது மறைந்த நிலை- ஞானத்தின் தொடக்கநிலை. உயிர் உடல் எடுப்பதற்குக் கர்மாவே காரணம் என்றாலும் ரூப நிலையிலேயே கர்மா முழுவதையும் நீக்கி முக்தி நிலையை அடைய முடியும். ஸ்தூல உடல் உயிருடன் வாழ்ந்து கொண்டிருக்கும்போதே இந்நிலையைஅடைந்தவர்களுக்கு 'ஜீவன் முக்தர்கள்' என்று சொல்லப்படும். இப்படிப்பட்டவர்களுக்கு பிறவி இல்லை.இவர்களைக் காணுவது இறைவனைத் தரிசிப்பது போலாகும். பற்று அற்ற நிலை. இவர்கள் மிகவும் கவனமாக இருந்து, தான் செய்யும் எக்காரியத்திலும் புதிய கர்மாதோன்றாமல் நடந்து கொள்வார்கள். இவர்களுக்கு தெய்வ சக்தி துணை நிற்கும். குருவருள் கூடவே இருக்கும். கர்ம வினை பலன் தந்ததை எவராலும் எடுக்க முடியாது. கர்ம பலன் இன்றி புதிய பலன் வந்து அடையவே முடியாது. நூற்றுக் கணக்கான பிறவிகளில் செய்த பலாபலன்கள் தனியாகவும், கலந்தும் உறுத்து வந்து வாட்டுங்கால், வாழ்வில் காணும் நன்மை தீமைகள் ஒரு மாபெரும் 'மாயை' என்றே தோன்றும், மனம் பக்குவமற்ற நிலையில் நற்பலன்களை தானேதான் சாதித்தது போலவும், தீய பலன்கள் மற்றவர்களால் ஏற்பட்டது போலவும் எண்ணங்கள் உருவாகும். மனம் பக்குவப்பட்ட தெளிந்த சிந்தனை உடைய ஞானிகள் நல்லது கெட்டது அனைத்தையும் ஒன்றாகவே கருதி ஏற்றுக் கொள்வார்கள்.

விதியை வெல்ல முடியுமா என்ற ஒரு சர்ச்சை தொன்று தொட்டு மக்கள் மனத்தில் உண்டு. ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும்' என்றார் இளங்கோவடிகள். 'ஊழிற்'பெருவழியாவுள, மற்றொன்று சூழினும் தான் முந்துறும்' என்று சொன்ன திருவள்ளுவர்'ஊழையும் உப்பக்கங் காண்பர் உழைவு இன்றித் தாழாது உஞற்றுபவர்' என்றார். சிலப்பதிகாரம் ஊழின் வலியை உணர்ந்து எழுதப்பட்ட காவியம். உண்மையில் நடந்த சரித்திரம். வெறும் கட்டுக்கதை அல்ல. மகாபாரதத்தில் சொல்லப்பட்டுள்ள ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் ஒவ்வொரு பின்னணி உண்டு என்று கதாபாத்திரங்கள் மூலம் நமக்கு அறிவிக்கப்படுகிறது, பல புராணங்களிலும் காவியங்களிலும் சுட்டிக் காட்டப்பட்ட ஒவ்வொரு செயலுக்கும் 'கர்ம சக்தி' என்ற பின்னணி உண்டு. இவைகளைப் படித்தும், கேட்டும், வாழ்வின் நிகழ்ச்சிகளை அனுபவிப்பதின் மூலமாகவும் ஊழ்வினையை வெல்ல முடியாது என்ற கருத்து மிக ஆழமாக மனித மனங்களில் பதிந்துள்ள ஒன்றாகும். ஆனால் 'ஊழையும் உப்பக்கம் காண்பர்' அதாவது ஊழையும் வெற்றி கொள்வர் என்று திருவள்ளுவர் கூறியுள்ளார். இதனை மனிதன் நம்ப வேண்டும். முடியுமா? என்று கேள்வியை எழுப்ப வேண்டியதில்லை. வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் பாடுபட வேண்டும்.

''இருந்ததனை இருந்தபடி இருந்துகாட்டி சொல்லாமல் சொன்னவரை நினையாமல்



நினைந்து பவதொடக்கை வெல்லுவாம்' குரு தட்சணாமூர்த்தியை பற்றிய மிகஅருமையான மிகமிக ஆழமான கருத்துடைய பாட்டு. குருமார்கள் கண்ணுக்கு தெரியாமலும் இருக்கலாம். இறைத் தன்மையுடைய குருமார்களும் இறையும் நாம் அவர்களை நினைத்த மாத்திரத்தில் நமக்கு அனுக்கிரகம் பண்ணுவார்கள். செங்கோடைக்குமரனெஎங்கே நினைக்கினும் அங்கே என் முன்வந்து எதிர் நிற்க வேண்டும் என்பது அருள் முருகனை வேண்டும் பாட்டு. குரு காயத்திரி மந்திரங்களுக்கு அதிசக்தி உண்டு. இது சத்தியம். குருவை நாம் நினைத்தாலும், நினைக்க வில்லையென்றாலும் குரு நம்மை மறப்பதில்லை. நம்முன் இருந்து நிழல் போல் நம்மைத் தொடர்கிறார். இது ஏராளமான பக்தர்களின் அனுபவ உண்மை.அதிபக்தி உள்ளவர்களுக்கும் பல சூழ்நிலைகளில் பிரார்த்தனை பலிப்பதில்லை. ஆனால் பக்தியே இல்லாதவர் என்று சொல்லப்படும் சிலருக்கு வெற்றிமேல் வெற்றி வரும். குருமார்கள் எதை எப்படி எப்போது கொடுக்க வேண்டும் என்பதை குறித்து வைத்துக் கொண்டிருப்பவர்கள். பக்தன் கேட்டுத்தான் கொடுக்க வேண்டும் என்று அவசியமே கிடையாது. இறைவனும் அருளுவது அப்படியே. குரு, தன் பக்தனின் ஊழ்வினை வழியே நின்று அவனுக்கு பலன்களைத் தருவார். மருந்து கசப்பதுபோல் பல நேரங்களில் ஊழ்வினை நுகர்ச்சி கசப்பாகத்தான் இருக்கும். இருப்பினும் ஏற்றுக் கொள்ள வேண்டியதுதான். செய்த கர்ம பலனை அனுபவிக்க வேண்டும் என்பது நியதியானால் குருவின் பங்கு என்ன? இறைவனின் பங்கு என்ன? என்று வினவக்கூடும். 'குரு' என்பவரிடம் அனைத்து இறைத்தன்மைகளும் நீக்கமற நிறைவுற உள்ளது. இறைவனே குருவாக வந்தாலும் 'குரு' சொல்வதைச் செய்யும் படியாக பக்தனுக்கு இறைவன் அருளுவான். பக்தன் கர்ம பலனை அனுபவிக்கும்போது புதிய காரியங்களை அவன் உருவாக்காமல் இருக்க பல வழிகளை குரு காட்டுவார். பரிச பாஷையிலோ, அல்லது கனவின் நிலையிலோ, அல்லது நேரடியாக உணர்த்தும் உபாயமான வழிகளின் மூலமோ குரு தன் பக்தனுக்கு வழி காட்டுவார்.

—(தொடரும்)

# திருவேங்கடவன் திருப்பள்ளி எழுச்சி

*கவிமாமணி* மதிவண்ணன்

1. கௌசலையின் மணிவயிற்றில்
கண்மலர்ந்த ராமா!
கதிர் உதிக்கக் கண்டோம் நீ!
கண்துயில லாமா!
செவ்வையுடன் தேவர்கள்தம்
கடன்முடிக்க எழுக!
திருமாலே! காலை ஒளி
போல அருள் பொழிக!

2. கோவிந்தா நீ விழித்தால்
குவலயமே விழிக்கும்.
கொடியினிலே கருடப்புள்
கோலமதும் செழிக்கும்!
தேவிதிரு மகள் காந்தா
திருவருளைப் பொழிவாய்
திரிபுவனம் சுபமாக
ஸ்ரீதரனே எழுவாய்.

3. மலைநாதன் மனங்கவர்ந்து
மகிழும் ஸ்ரீ தேவி!
மதுகைட பரை அழித்த
அவன் மார்பில் மேவி
நிலையாக அருள் தருவாய்
அலர்மேலுத் தாயே!
நிர்மலப்பூங் காலைஇது
கண்மலர்க நீயே!

4. நிலவினிலே தாமரை போல்
நிலவும் இருவிழிகள்
நிமலனிடம் அன்பர்புகழ்
நிகழ்த்துகின்ற மொழிகள்
கலைமகளும் இந்திரையும்
மலைமகளும் ஒன்றாய்க்
கரங்குவித்து வணங்குகிறார்
வாழ்க நீயும் நன்றாய்.

5. ஆகாய கங்கையிலே
அரவிந்தம் பறித்து
அத்ரி முதல் எழுமுனிவர்
உன்அருளைக் குறித்து
வேகமுடன் வந்துள்ளார்
வேங்கடவா சேவை
விளங்கவேண்டும் விழிதிறந்து
கேட்பாய் புகழ்ப் பாவை.

6. சண்முகனும், சிவனாரும்
தேவர்களும் போற்றிச்
சாற்றுகிறார் உன்னுடைய
மகிமையினை ஏற்றி.
முன்னிலையாய்ச் சந்நிதியில்
தேவகுரு நின்று
மொழிகின்றார் பஞ்சாங்கம்
கேட்டெழுக நன்று!

7. காலை இளம் பரிதியினால்
பொழுது புலர்கிறது
காலடியைத் தொழுவதற்கே
பூக்கள் மலர்கிறது.
சாலை இளம் தென்றல்உன்றன்
சந்நிதியின் மேலே!
சாற்றுகிறோம் வந்தனங்கள்
விழித்தெழுவாய் மாலே!

8. ஐயன்உன்றன் முன்னிலையில்
பஞ்சவர்ணக் கிளிகள்
அரங்கேற்றும் உன்நாமம்
சிந்தைமகிழ் ஒலிகள்
மெய்மறந்து பக்தரெலாம்
நிற்கின்றார் கேட்டு!
வேங்கடவா! விழிமலர்வாய்
வேண்டுகோளை ஏற்று.

9. நகருவதும் பகருவதும்
தன்தொழிலாய் ஆன
நாரதரும் நிலையானார்
நின்னடிகள் காண.
மிகநல்ல உன்சரிதம்
வீணைமூலம் சொல்லி
வித்தகரும் மகிழ்கின்றார்
எழுகநீயும் பள்ளி.

10. செங்கதிரோன் உதித்ததனால்
கமலமலர் விரியும்.
சிறைவாசம் கண்டவண்டு
வெளியில்வந்து திரியும்.
பொங்கிருளில் சேவையின்றி
வண்டுகட்கு ஏக்கம்
புலர்காலை எழுந்ததினால்
புதுமை கீதம் ஆர்க்கும்.

11. ஆயர்பாடி மங்கையர்கள்
தயிர்கடையும் ஓசை!
அன்பர் நான்கு திக்கினிலும்
உனைப்பரவும் பூசை!
மாயனுன்றன் திருச்செவிக்கு
இவையும் கேட்க விலையா!
மலர்ந்தது காலை இன்னும்
துயில்வதுமோர் கலையா?

12. குவளைமலர் தனதுநிறம்
உன்னதென்று சொல்லும்
கூடுகின்ற வண்டுகளோ
அதன்நிறத்தை வெல்லும்!
கவலையின்றி வண்டுகளும்
பூக்களும் களிக்க
கண்மலர்வாய் மாயவனே
திசைகள் எக்களிக்க.

13. மெய்யன்பே மேனியெனும்
அலர்மேலாம் மங்கை
மேவுகின்ற மார்பினனே
அருளுகஉன் செங்கை.
வையகமே வந்தாய்நீ
வைகுண்டம் விட்டு.
வளர்மாலே எழுந்திடுவாய்
துயிலுவதை விட்டு!

14. ஐம்முகனும், இந்திரனும்
நான்முகனும் சேர்ந்து
அன்புடனே தொழவந்தார்
உன்வடிவைத் தேர்ந்து.
பொய்கையிலே நீராடிப்
பொலிகின்றார் அவர்கள்.
புலர்கவிழி! பொழிக அருள்!
நலம் பெறுவார் அவர்கள்!

15. தேவர்களும், முனிவர்களும்
திருமுன்னர் பணிந்தார்.
திருமலையின் எழுபெயரைச்
சித்தத்தில் அணிந்தார்.
சேவு சைல வேங்கடமா
மலைஎன்றே ஓதித்
திருக்கோயில் பணிகின்றார்
எழுக ஆதி ஜோதி.

16. அரன், இந்திரன், இமயன், வாயு
அக்னியோடு, வருணர்,
அருங்குபேரன், நைருதியாம்,
என்திசையோடுறுநர்
இருகையும் கூப்பியுள்ளார்.
இடவேண்டும் ஆணை
எம்விழிகள் பருகட்டும்
தரிசனமாம் தேனை.

17. கருடநடை, சிம்மநடை
துரகநடை என்று
கருணையனே உன்றன்உலா
நடைபெறுவ துண்டு
அருமையான அந்நடையால்
ஆக்கம்பெற எண்ணி
அவர்களெல்லாம் வந்துள்ளார்
ஆலயத்தை நண்ணி.

18. தேவருடை வாழ்வினிலும்
மேவுகின்ற கோள்கள்,
திருமலையான் பக்தரெனில்
பணிவர் அவர் தாள்கள்?
சேவை செய்யும் அவர்களும்உன்
திருவருளுக் காகச்
சேர்ந்துள்ளார் விழித்தெழுவாய்
சிந்தை நிறைவாக.

19. நவக்கிரகங்கள் முக்தியினை
நாடிடாமல் என்றும்
தாரணன்உன் திருமலையே
நாடி இங்கு ஒன்றும்
பவமற்றார்க் குதவுகிறார்
அவர்தலைமேல் பாதம்
பதிப்பதற்கு எழுக என்றே
பகர்ந்தோம் சுப்ர பாதம்.

20. தானதர்மம் செய்து சொர்க்கம்
போகஉள்ள மாந்தர்
தனித்து பக்தி செய்து மோட்சம்
சாருகின்ற மாந்தர்
வீடுபெறப் போகையிலே
விளங்கு சிகரம் கண்டு
மீண்டும் இந்தக் கூண்டடைந்தார்
நீ எழுக நன்று.

21. நின்னைக் காண நாகராஜன்
பட்சிராஜன் வந்தார்
நித்ய சூரி பற்பல பேர்
நினை வணங்கு கின்றார்.
அன்னை என ஆகி எம்மை
அரவணைப்பாய் நீயே
அடியவர்கள் பயன்பெறவே
காலை விழிப்பாயே!

22. அடைந்தவர்கள் அனைவருக்கும்
அபயம் உன்றன் நாமம்
அதனை நெஞ்சில் அணிபவர்க்கு
எப்பொழுதும் சேமம்
கடைக்கண்ணின் கருணையொன்றே
எங்கள் இலக் காகும்
கண்விழிப்பாய் மாயவனே
முன்னைவினை போகும்.

23. நீலமேனி அழகினிலே
திருமக்ள்தான் ஒன்றி
நினைவிழந்தாள் நின்னைக் காலைத்
துயிலெழுப்ப லின்றி.
கோலமங்கை தனங்களிலே
கூடிவிட்டாய் நீயும்.
குணக்குன்றின் மழையின்றே.
எங்கள் உளம் காயும்.

24. இந்நிலத்தைக் காப்பதற்கே
ஒன்பதவதாரம்
இதுவரைக்கும் கண்டவனே
கல்கி அவ தாரம்
மண்ணுலகம் உய் வதற்கே
எப்போது தோன்றும்!
வந்துபக்தர் காத்துள்ளார்
கண்விழிக்க வேண்டும்.

25. பொன்குடத்தில் ஆகாய
கங்கைப் புனல் வாங்கிப்
புனிதமான மணம் ஊட்டித்
தம்தலைமேல் தாங்கி
வண்ணமணி வாசலிலே
உன்னவர்கள் உள்ளார்.
வரந்தரவே உன்னையல்லால்
வேறு யாரே வல்லார்.

26. எழுந்திடுவாய் நீ என்ற
எக்களிப்பில் வானில்
இறக்கைவிரிக்கும் பறவை
குரல் கொடுக்கும் தேனில்
செழுமைநிறக் கமலங்கள்
மலர்கிறது பாராய்.
சீனிவாச மூர்த்தியே நீ
துயிலெழுந்து வாராய்?

## எல்லாம் அன்னையின் செயல்

நன்றே வருகினும் தீதேவிளைகினும்
நான் அறிவது
ஒன்றேயும் இல்லை உனக்கே பரம்
எனக்கு உள்ளவெல்லாம்
அன்றே உனதென்று அளித்து
விட்டேன் அழியாத குணக்
குன்றே அருட்கடலே இமவான்
பெற்ற கோமளமே.

—அபிராமி அந்தாதி


27. இருவிழிகள் மலர்ந்ததும்நீ
திருவடிவம் காண
இமையவர்கள் கண்ணாடி
ஏந்தியுள்ளார் ஞான
அருளாளர் நிற்கின்றார்
அகம் உனக்கே ஆக்கி
அணிமாலே! அருள் புரிக
அன்பர் வினை நீக்கி.

28. ஏழுமலை சிகரம் மீது
இலங்கும் அன்புச் சிகரம்
என்னவேஉன் சந்நிதியை
பக்தர் நெஞ்சம் பகரும்!
ஆழிமகள் உறைவிடமே!
அருளின்மூலச் சுடரே!
அழகுவிழி மலர்ந்திடுக
அற்றதெங்கள் இடரே!

29. கதிர் உதிக்கும் காலையிலே
இதைப் படிக்கும் புவியார்
கல்விசெல்வம் மேவிடுவார்
கவலையிலே தவியார்.
முதற்பொருளாம் சீனிவாச
மூர்த்தியினைப் பற்றி
மொழிந்திடும் இப் பாடலினால்
எழுந்தவுடன் வெற்றி.

# மக்களின் தொண்டே மகேசன் தொண்டு

டாக்டர் கரு. நாகராஜன்
நாட்டுநலப் பணித்திட்ட இணை இயக்குநர், சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை.



*[நாட்டுநலப் பணித் திட்டம் தொடங்கி வெள்ளி விழா கொண்டாடப்படுகிறது. அதை யொட்டி இக்கவிதை வெளியிடப்படுகிறது.]*

மக்கள் தொண்டே மகேசன் தொண்டெனும்
மரபினைக் கண்டவர்நாம்—சேவை
மனத்தினில் கொண்டவர்நாம்—அந்த

தக்கநல் பாதையில் தொண்டினை ஆற்றிட
தந்தனர் திட்டமொன்று—இளைய
தலைமுறை வாழ்கவென்று!

'நாட்டு நலப்பணி' என்றஅத் திட்டமும்
நன்றாய் நடக்கிறது—புதுமை
நாளும் படைக்கிறது—இங்கு

ஏட்டினை ஏந்திடும் இளையவர் கண்களில்
இன்னொளி பாய்கிறது—இமயமும்
இவர்முன் சாய்கிறது!

பழுதாய்க் கிடந்த கோயில்கள் குளங்கள்
பண்பட உழைத்தார்கள்—ஆளுமைப்
பண்பையும் வளர்த்தார்கள்—இளம்


பொழுதாய் எழுந்து புயலாய் நடந்து
புன்மையைக் கொய்தார்கள்—பசுமைப்
புரட்சியும் செய்தார்கள்!

சேவைச் சிறகை விரித்திடும் இவர்க்கு
தேச நலன்மூச்சு—ஒற்றுமைச்
சிந்தனை தான்பேச்சு—புரட்சிக்

காவிய மாகிய 'நாட்டு நலப்பணி'
காணுது வெள்ளிவிழா—எங்கள்
கண்களில் இன்பஉலா.

அப்பரும் மாணிக்க வாசக ரும்இங்கு
ஆற்றிய சேவைகளே—இன்றும்
அவசரத் தேவைகளே—அந்த

ஒப்பிலா நற்பணி உவப்புடன் ஆற்றியே
ஒற்றுமைப் பயிர்வளர்ப்போம்—பக்தி
உணர்வுடன் உயிர் வளர்ப்போம்.



நவராத்திரி விழா தொடர்ச்சி...

இந்து சமயத்தின் பெரும் பிரிவினராக விளங்கும் சைவ சமயத்திலும், வைணவ சமயத்திலும் இப்பெருவிழா பெருமையுடன் கொண்டாடப்படுகிறது.

**நவராத்திரி கொலு**

இந்நவராத்திரி விழாவின் சிறப்பு அம்சம் இல்லங்களில் வைக்கப்படும் கொலுவாகும். தெய்வங்கள், தெய்வங்களால் படைக்கப்பட்ட உயிரினங்கள், மனிதரால் படைக்கப்பட்ட விஞ்ஞானப் புதுமைகள் என யாவும் மண் பொம்மைகளாக-கொலுவாக அலங்கரிப்பதைக் காணுகின்றோம். பற்பல தெய்வங்களை ஒரு சேரக் காணும்போது, முன்னமே கூறியது போல், 'ஒன்று பரம்பொருள்' என்ற சமய ஒற்றுமை உணர்வு வலுப்பெறுகிறது. மேலும் ஒன்றாகிய பரம்பொருளால் ஆட்டுவிக்கப்படும் பொம்மைகளே உயிர்களாகிய நாம் என்ற உண்மையையும் இந்த நவராத்திரி கொலு நமக்குத் தெளிவுபடுத்துகிறது.

வீட்டையும், வீட்டின் சுற்றுப் புறத்தையும் துப்புரவாக வைத்துக் கொள்ள வேண்டும் என்ற சுகாதார உணர்வையும் நவராத்திரி கொலு வைப்பதனால் நாம் பெறுகிறோம். மேலும் மனிதர்களின் நல்ல கூட்டுறவிற்கு இந் நவராத்திரி கொலு பெரிதும் பயன்படுவதும் எண்ணி மகிழத்தக்கது. அண்டை அயலாருடன் நட்புறவுடன் வாழ்ந்து மதித்திடும் வகையில் ''கொலு காணவாரீர்'' என ஒருவரை யொருவர் வரவேற்று உபசரிக்கும் விருந்து உபசாரமும் இவ்விழாவின்போது சிறந்து விளங்கிடக் காணுகிறோம். ஆகவே 'கூடி வாழ்ந்தால் கோடிநன்மை' என்ற பழமொழிக்கிணங்க நல்ல நட்புறவை நவராத்திரி விழாவும், நவராத்திரி கொலுக்களும் ஏற்படுத்தி வளர்க்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

**பெண்ணின் பெருமை போற்றும் விழா**

''பெண்மை வாழ்கவென்று கூத்திடுவோமடா!' என்றார் மகாகவி பாரதி. நாடு போற்றும் இந்நவராத்திரி விழா பெண்ணினத்தின் பெருமை போற்றும் விழா என்பதும் இங்கு எண்ணி மகிழத்தக்கது.

இறைவனைப் 'பால் நினைந்தூட்டும் தாய்' என்று போற்றிடுவார் மாணிக்கவாசகர். இறைவனுடைய அருள் உணர்வையே 'சக்தி' என்று சைவசித்தாந்திகள் போற்றுகின்றனர்.

''அருளது சக்தி யாகும் அரன்தனக்கு
அருளையின்றேல் தெருளுறுசிவமில்லை'

என்ற கருத்தைக்காண்க. ஆணாக, பெண்ணாக காணும் யாவுமாக நின்றருள் பாலிப்பது இறை சக்தி. இறைவனை ஆண் என்று கருதும்போதும் அவன் சுரக்கும் இன்னருளைப் பெண்மையாகப் போற்றுவது நம் சமயம். அன்பும், அருளும், கருணையும் ஆண்களைவிடப் பெண்களுக்கே அதிகம் என்பதால் ஆண்தெய்வங்களைவிடவும் பெண் அம்பிகைகளை வழிபட்டாலே அதிகப் பலனைப் பெறமுடியும் என்றும் கூறுவர். 'அம்பிகையைச் சரண் அடைந்தால் அதிக வரம் பெறலாம்' என்றல்லவா மகாகவி பாரதியாரும் போற்றியிருக்கிறார்.

அம்பிகை, தம்மை வழிபடும் பக்தருக்கு வாரி வழங்கி வான்கருணை செய்வதனால் அம்பிகையின் பக்தர்கள் பிறரிடம் போய்குறை இரக்க வேண்டுவதில்லையாம்.

''இல்லாமை சொல்லி ஒருவர்தம் பால் சென்று
இழிவுபட்டு
நில்லாமை நெஞ்சில் நினைகுவிரேல் நித்தம்
நீடுதவம்
கல்லாமை கற்ற கயவர்தம் பால் ஒரு
காலத்திலும்
செல்லாமை வைத்த திரிபுரை பாதங்கள்
சேர்மின்களே'
(அபிராமி அந்தாதி)

இன்னும் அம்பிகையின் பக்தர் இன்னார் என்பதை மிக எளிதாக அடையாளம் காணும் வகையில் அவர்கள் வீடு வாசல் நிலபுலம்மிக்கவராகவும், சமுதாயத்தில் பட்டம் பதவிகள் வாய்க்கப் பெற்றவராகவும், வண்டிவாகன வசதிகள் பணியாட்கள் கொண்டவராகவும் விளங்கும் தன்மையில் இருந்தே அவர் அம்பிகையின் பக்தர் என்பதை எளிதில் தெளிந்து கொள்ளலாம் என்றும் அம்பிகையின் அருள் திறத்தைப் போற்றும் பாடல் பின்வருமாறு:

'வையம் துரகம் மதகரி மாமகுடம் சிவிகை
பெய்யும் கனகம் பெருவிலையாரம் பிறை
முடித்த
ஐயன்திரு மனையாள் அடித்தாமரைக்கு
அன்புமுன்பு
செய்யும்தவம் உடையார்க்கு உளவாகிய
சின்னங்களே''

என்பதுஅபிராமிபட்டர்தம்அருட்பாடலாகும்'.

இத்தகைய அம்பிகையின் அருள் அம்சம் நிரம்பியவர்களாக விளங்குவதால்தான் பெண்மையும் தாய்மையும் நம் பாரதத் திருநாட்டில் பெரிதும் போற்றப்படுகிறது. இந்நவராத்திரி விழாவைச் சிறப்புடன் கொண்டாடுவதிலும் பெண்களுக்குத்தான் அதிகப் பங்கிருக்கிறது. இரண்டு வயது முதல் பத்து வயது வரையிலுள்ள கன்னிகைகளை நவதுர்க்கைகளாக போற்றி அவர்களைக்கொண்டேபராசக்தியைப் பூசிப்பதும், வீட்டிற்குவரும் பெண்களைத் தெய்வாம்சமாக நினைத்து அவர்களுக்கு மலர் சந்தனம், பழம் கண்ணாடி, இரவிக்கை, ஆடை அறுசுவை உண்டி ஆகியவற்றை வழங்கிச் சிறப்பிப்பதும் கொண்டு, நவராத்திரி விழாவைப் பெண்களுக்கே உரிய பெருமைமிகு விழா என்று கூறுவதும் பொருத்தமுடைய ஒன்றாகும். மேலும் மகிடாசுரன் பெண்களை, மிக துச்சமானவர்களாகமதித்து ஆற்றல் இல்லாத அவர்கள் தமக்கு ஒன்றும் தீங்கு செய்ய இயலாது என்றெண்ணி ஒரு பெண்ணால் மட்டுமே மரணம் வேண்டும் என்பதாகவரம் பெற்றிருந்தான். புவனம் பதினான்கையும் படைத்தவளே பராசக்தியாகிய ஒரு பெண்தான் என்பதை அவன் உணரவில்லை.

''பூத்தவளே புவனம்பதினான்கையும் பூத்த
வண்ணம்
காத்தவளே பின்கரந்தவளே கறைகண்டனுக்கு
மூத்தவளே என்றும் மூவா முகுந்தற்கு
இளையவளே
மாத்தவளே உனைஅன்றி மற்றோர் தெய்வம்
வந்திப்பதே''

என்றல்லவா அபிராமி பட்டர் புவனங்கள் பதினான்கையும் படைத்த மாபெரும் சக்தியாகப் பெண்மையைப் போற்றுகிறார். அப்பெண்மை சக்தியாகிய பராசக்தியே மகிடனை சம்ஹாரம் செய்து மகிடாசுரமர்த்தினியாகவும் விளங்குகின்றாள். இம்மகிடாசுரமர்த்தினியை விஜய தசமி நன்னாளில் பூசித்து வழிபட்டால் வழிபட்டோர்க்கு கல்வி, தனம், உடல் நலம் முதலான பதினாறு பேறுகளும் எளிதில் வாய்க்கும். 'பதினாறும் பெற்றும் பெருவாழ்வு வாழ' மக்கள் கொண்டாடும் ஒப்பற்ற விழாவே பெண்மையைப் பொற்றும் நவராத்திரி விழாவாகும்.

''கலையாத கல்வியும் குறையாத வயதுமோர்
கபடுவாராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழுபிணியிலாத உடலும்
சலியாத மனமும் அன்பகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத
கோலுமொரு
துன்பமில்லாத வாழ்வும்
துய்யநின் பாதத்தில் அன்பும் உதவிப்
பெரிய தொண்டரொடு கூட்டுகண்டாய்
அலையாழி அறிதுயிலும் மாயனது தங்கையே
ஆதிகடவூரின் வாழ்வே
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி அபிராமியே''.

என்பதால் முதல் மூவருக்கும் அன்னையாகிய அபிராமிதேவி யாவருக்கும் பதினாறுபேறுகளையும் இந்நவராத்திரி விழாவின்போது அருளிடுவாள் என்பது திண்ணமான உண்மையாகும்.

**நிறைவுரை**

ஒன்று பரம்பொருள் அது பராசக்தி என்பதை உணர்த்தும் ஒப்பற்ற விழாவாகவும், இறைசக்தி ஆட்டுவிக்க ஆடும் பொம்மைகளே உயரினங்கள் என்பதைத் தெளிவு செய்யும் சீர்மிகு விழாவாகவும், பெண்மையைப் போற்றும் பெருந்திருவிழாவாகவும், கூடி வாழ்ந்தால் கோடி நன்மை என்ற நட்புணர்வுத் தத்துவத்தை நிலை நாட்டும் கலை வளர் கண்கவர் விழாவாகவும் விளங்கும் நவராத்திரி விழாவை யாவரும் ஆண்டுதோறும் சிறப்புறக் கொண்டாடி, பதினாறு பேறுகளும் குறைவறப் பெற்று நிறைவுற வாழ்ந்திடுவோமாக.

# திருக்கோயில்களின் திருப்பணிக்கு நிதி ஒதுக்கீடு



மாண்புமிகு தமிழக முதல்வர் ஆலய மேம்பாட்டு பணிகளுக்காக கடந்த 27-9-1993 அன்று தமிழ்நாட்டிலுள்ள 23 கோயில்களுக்குத் திருப்பணிகள் செய்வதற்காக 1 கோடியே 70 இலட்சம்ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்தார்கள்.

இதனைத் தொடர்ந்து மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தற்போது கீழ்க்காணும் 32 திருக் கோயில்களுக்கு திருப்பணிகள் செய்வதற்காக 1 கோடியே 65 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்துள்ளார்கள். அக் கோயில்களின் விவரம் பின்வருமாறு:

1. நீலகண்ட பிள்ளையார் கோயில், தஞ்சாவூர் மாவட்டம்.

2. ஆதிகேசவ பெருமாள் கோயில், செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம்.

3. வீரட்டேஸ்வரர் கோயில், தென் ஆற்காடு மாவட்டம்.

4. சிவகொழுந்தேஸ்வரர் கோயில் தென்னாற்காடு மாவட்டம்.

5. தேவநாதசுவாமி கோயில், தென்னாற்காடு மாவட்டம்.

6. சிஷ்ட் குருநாதஸ்வாமி கோயில், தென்னாற்காடு மாவட்டம்.

7. நெல்லையப்பர் கோயில், திருநெல் வேலி மாவட்டம்.

8. சந்திரசூடேஸ்வரர் கோயில், தர்மபுரி மாவட்டம்.

9. பொன்னேஸ்வரசுவாமி கோயில், தர்மபுரி மாவட்டம்.

10. மாரியம்மன் காளியம்மன் கோயில், சேலம் மாவட்டம்.

11. நாகநாதசுவாமி கோயில், புதுக் கோட்டை மாவட்டம்.

12. தியாகராஜ சுவாமி கோயில், திருவொற்றியூர், சென்னை.

13. தர்மராஜா திரவுபதியம்மன் கோயில், திருவண்ணாமலை - சம்புவராயர் மாவட்டம்.

14. அம்மன் பெருமாள்கோயில், நாகப் பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம்.

15. லக்ஷ்மி நாராயணப் பெருமாள் கோயில், நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம்.

16. தண்டபாணிசுவாமி கோயில், வடாற்காடு அம்பேத்கார் மாவட்டம்.

17, ஆகாச மாரியம்மன் கோயில், தஞ் சாவூர் மாவட்டம்.

18. சுப்பிரமணியசுவாமி கோயில், நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம்.

19. ஆதிகேசவ பெருமாள் கோயில், கன்னியாகுமரி மாவட்டம்.

20. மாரியம்மன் கோயில் திருச்சி மாவட்டம்.

21. மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில், மதுரை மாவட்டம்.

22. சுப்பிரமணியசுவாமி கோயில், கோயம்புத்தூர் மாவட்டம்.

23. தண்டாயுதபாணி கோயில், திண்டுக்கல் அண்ணா மாவட்டம்.

24. கொங்காளியம்மன் கோயில், பெரியார் மாவட்டம்.

25. மதுரைவீரன் மாரியம்மன் கோயில் சேலம் மாவட்டம்.

26. சித்தநாத சிவன் கோயில், தஞ் சாவூர் மாவட்டம்.

27. மருந்தீஸ்வரர் கோயில், திருவான் மியூர், சென்னை.

28. மாகாளியம்மன் கோயில் தென் னாற்காடு மாவட்டம்.

29, பன்னன் குரந்தாதையா ஐயனார் கோயில், புதுக்கோட்டை மாவட்டம்.

30. நாகநாதசுவாமி கோயில், திருச்சி மாவட்டம்.


31. ஸ்ரீ கந்தசாமி கோயில், சேலம் மாவட்டம்.

32. கைலாசநாதசுவாமி கோயில், திண்டுக்கல் அண்ணா மாவட்டம்.

## அடுத்த இதழில்

**தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திருமந்திரச் செம்மல் திருமிகு டி.வி. வெங்கட்ராமன், ஐ.ஏ.எஸ். அவர்களின் 'அருள் அனுபவம்' அடுத்த இதழில் வரும்.**

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-600034
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.,
அச்சிட்டோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002



மயிலை அருள்மிகு கபாலீசுவரர் ஆலயத்திற்குக் காஞ்சி மடாதிபதி ஸ்ரீஜெயேந்திர சரசுவதி சுவாமிகள் வருகை புரிந்தார்கள். அறநிலையத் துறை ஆணையாளர் திருமிகு ஜி. இராமகிருஷ்ணன், ஐ.ஏ.எஸ். அவர்கள் காஞ்சி மடாதிபதி அவர்களை வரவேற்றார்கள்.






மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் சீரியதலைமையின் கீழ் 21.10.93 அன்று தமிழ்நாடு திருக்கோயில் நிர்வாக வாரியக் கூட்டம் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் திருமிகு வெ. நடேசன்பால்ராஜ் அவர்களும், மற்ற திருக்கோயில் நிர்வாக வாரிய உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.